# ஈழமுரசு

அவுஸ்திரேலியா

முரசு : 01 முழக்கம் : 277 *10 September 2013* Vol : 01 Issue :277


ஓர்மம் குறையாத ஒற்றுமையுடன் தேர்தலை சந்திக்க தாயகம் தயார் 8,9





பிள்ளையும் ஜெனிவாவும் கிடுக்குப் பிடிக்குள் இலங்கை 6

முடி சூடா மன்னன் Steve Jobs 13





# முடி சூடியது Liberal

# அடி வாங்கியது Labor



# தியாகதீப கலைமாலை - 2013



தியாகி
திலீபனின்
26 ஆவது ஆண்டு
நிறைவு நினைவு
தின நிகழ்வு

**மெல்போர்னில்**

**Date - 29th of September 2013**
**Time - 6 PM**
Glen Waverly Community Centre,
700, Waverly Road,
Glen Waverly.

**சிட்னியில்**

**Date - 22nd September 2013**
**Time - 5 PM - 7 PM**
The Hills Sports High School,
Best Road,
Seven hills.

**தமிழர் ஒருங்கிணைப்புக்குழு**

“நடந்து முடிந்த தேர்தலில் அகதிகள் வருகையே மிக முக்கிய பேசு பொருளாக இரு பெரிய கட்சிகளாலும் கையாளப்பட்டது. அகதிகள் தொடர்பில் யார் அதிகம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கிறார்கள் என்பதில் இரு கட்சிகளுமே ஏட்டிக்குப் போட்டியாக இயங்கத் தொடங்கின. இந்தப் போட்டியில் இருகட்சிகளுமே தங்கள் தரத்தைத் தாழ்த்திக்கொண்டே சென்றன. இரு கட்சிகளும் அகதிகள் பிரச்சனையைக் கையாண்ட முறையில் பொதுமக்களை மிரளவைத்து மற்றக் கட்சிக்கு எதிரான மனநிலையைத் தோற்றுவிக்க முயன்றன.”

## அவுஸ்திரேலிய நாடாளுமன்றத் தேர்தல்

# ஈழத்தமிழர் மீது செலுத்திய தாக்கம் என்ன?

ஒருவழியாக அவுஸ்திரேலிய நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. எதிர்வுகூறப்பட்டது போலவே லிபரல் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. ஆனாலும் லேபர் கட்சி மிகக்கடுமையான வீழ்ச்சியையோ லிபரல் கட்சி மிகப்பெரிய வெற்றியையோ பெற்றுவிடவில்லை.

லேபர் கட்சி ஆட்சியிழப்பதற்குப் பல காரணங்களைச் சொல்ல லாம். இரண்டு தவணைகள் தொடர்ச்சியாக ஆட்சியிலிருந்த கட்சி மீது மக்களுக்கிருக்கும் இயல்பான சலிப்புத்தன்மையும் ஒரு மாற்றத்துக்கான அவாவும் மிக முக்கியமான காரணம். கட்சிக்குள்ளே இருக்கும் இழுபறிகளும் குழுநிலை வாதமும், தலைமையிடத்துக்கு நிலவும் போட்டியும் இன்னொரு காரணம். இரண்டுமுறை கட்சித்தலைவரும் பிரதமரும் தேர்தலின்றியே மாறவேண்டி வந்ததும் மக்களிடத்தில் லேபர் கட்சிமீதான அவநம்பிக்கையைத் தோற்றுவித்தது.

எல்லாவற்றுக்கு மேலாக ஊடக உலகம் ஆட்சிமாற்றம் வந்தே தீரவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு களத்திலிறங்கிச் செயற்பட்டது மிகமிக முக்கிய காரணமாக அமைந்துவிட்டது. அச்சூடகங்களில் ‘தி ஏஜ்’ பத்திரிகை தவிர்ந்த மிகுதி அனைத்து ஊடகங்களும் லிபரல் கட்சி ஆட்சிக்கு வரவேண்டுமென்று மிகுந்த பிரயாசையோடு செயற்பட்டு வந்தன. சில பத்திரிகைகள் ஊடக வரம்பையும் மீறி இந்தத் தேர்தலில் ரொனி அபோட்டை ஒரு மீட்பராகச் சித்தரித்து அவர்தான் வெல்ல வேண்டுமெனச் செயற்பட்டன. இவை கிட்டத்தட்ட மக்களை மூளைச்சலவை செய்துகொண்டிருந்தன என்றும் சொல்லலாம்.

உலகத்தில் இயல்பாகவே வந்த பொருளாதார நெருக்கடி அவுஸ்திரேலியாவையும் பாதித்ததால் வேலை வாய்ப்புப் பிரச்சனை மக்களை வதைக்கும் ஒரு சிக்கலானது. இதேவேளை அதிகரித்த படகுகள் வழியான புகலிடக் கோரிக்கையாளரின் வருகையும் மிகமுக்கியமான தாக்கத்தை மக்களிடத்தில் ஏற்படுத்தியது.

நடந்து முடிந்த தேர்தலில் அகதிகள் வருகையே மிக முக்கிய பேசுபொருளாக இரு பெரிய கட்சிகளாலும் கையாளப்பட்டது. அகதிகள் தொடர்பில் யார் அதிகம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கிறார்கள் என்பதில் இரு கட்சிகளுமே ஏட்டிக்குப் போட்டியாக இயங்கத் தொடங்கின. இந்தப் போட்டியில் இருகட்சிகளுமே தங்கள் தரத்தைத் தாழ்த்திக்கொண்டே சென்றன. இரு கட்சிகளும் அகதிகள் பிரச்சனையைக் கையாண்ட முறையில் பொதுமக்களை மிரளவைத்து மற்றக் கட்சிக்கு எதிரான மன நிலையைத் தோற்றுவிக்க முயன்றன.

இதேவேளை, இதுவரை காலமும் எதிர்க்கட்சியாகவிருந்த லிபரல் கட்சியானது ஆளும் கட்சியைச் சாடுவதை மட்டுமே ஒரு வழிமுறையாகக் கொண்டு தேர்தலைச் சந்தித்தது எனலாம். தேர்தல்நாள் அறிவிக்க முன்பு பகிரங்க விவாதத்துக்கு வரும்படி கெவின் றாட் அழைத்தபோது அவ்விவாதத்துக்குச் செல்லாமை, லிபரல் கட்சியின் வேட்பாளர்களின் அசட்டுத்தனமான பிரச்சா ரங்களும் கருத்துக்களும், ஏன் எதிர்க்கட்சித் தலைவர் ரொனி அபோட்டினது சர்ச்சைக்குரிய கருத்துக்களும் திட்டங்களும் என பல பாதகமான அம்சங்கள் இருந்தபோதும் இறுதியில் லிபரல் கட்சியை மக்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்றால் லேபர் கட்சிமீது எவ்வளவு விசனத்தோடு இருந்தார்கள் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

அகதிகள் வருகையை நிறுத்த இந்தோனேசியாவிலுள்ள பட குகளை வாங்கும் திட்டத்தை ரொனி அபோட் அறிவித்த தாக இருக்கட்டும், சாலையில் வாகன நெரிசலுக்கும் மருத்துவ மனையில் நோயாளர் நெருக்கடிக்கும் அகதிகள் வருகைதான் காரணமென்று லிபரல் கட்சி வேட்பாளர் ஒருவர் கருத்து வெளி யிட்டதாக இருக்கட்டும், இதுபோன்று பல அபத்தங்களைத் தன்ன கத்தே கொண்டிருந்தபடியே தேர்தலைச் சந்தித்தது லிபரல் கட்சி.

### *தமிழ்மக்களும் தேர்தலும்*

தமிழ்மக்களைப் பொறுத்தவரை இரு முதன்மைக் கட்சி களுமே தமிழர்பால் நியாயமாக நடந்துகொள்ளவில்லை என்பது வெளிப்படை. தமிழ் அகதிகள் தொடர்பாக லேபர் கட்சி நடந்துகொண்ட முறை அவுஸ்திரேலிய வரலாற்றின் இருண்ட பக்கங்களாகவே இருக்கின்றன. மிக மோசமான மனிதவுரிமை மீறல்களை லேபர் கட்சி தமிழ் அகதிகள் மீது நிகழ்த்தியிருக்கின்றது. ‘அவுஸ்திரேலியப் பாதுகாப்புக்கு அச்சு றுத்தலானவர்கள்’ என்ற பதாகையின்கீழ் பலரை வாழ்நாட் சிறையில் அடைத்து வதைத்து வந்துள்ளது. நூற்றுக்கணக்கான புகலிடக் கோரிகையாளர்களை சரியான விசாரிப்பு வழக்கங்கள் இன்றி அவர்கள் வெளியேறித் தப்பியோடிவந்த கொலை வலயத்துக்கே திரும்பவும் அனுப்பியிருக்கின்றது. மேலும் பேரின வாத சிறிலங்கா அரசுடன் கைகோர்த்து மிகமிக நெருக்கமாகப் பணியாற்றி வந்திருக்கின்றது.

மறுபுறுத்தில் இதுவரை காலமும் எதிர்க்கட்சியாகவிருந்த லிபரல் கட்சியும் தமிழ்மக்கள் மேல் கரிசனைகொண்டு எக்கால மும் செயற்பட்ட கட்சியன்று. சில மாதங்களின் முன்னர் சிறி லங்காவுக்குப் பயணம் செய்த லிபரல் கட்சியின் பிரமுகர்கள், அங்கு சென்று பாதிக்கப்பட்ட இடங்களையும் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களையும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சிறி தரனையும் சந்தித்து, அனைத்து உண்மைகளையும் நேரிலே கண்டறிந்தும் கேட்டறிந்தும் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பி வந்தார்கள். ஆனால் இங்கு மனச்சாட்சியே அற்றவிதத்தில் சிறிலங்கா நிலைமை தொடர்பில் கருத்து வெளியிட்டார்கள் ‘அங்கே எந்தச் சிக்கலுமில்லை, மக்கள் நிம்மதியாக வாழ்கிறார்கள், இன நல்லிணக்கம் நடந்துகொண்டிருக்கிறது. அங்கிருந்து அவுஸ்திரேலியா வருபவர்கள் உண்மையில் உயிராபத்துப் பிரச்சனையால் வரவிலலை, மாறாக பொருளாதார



அகதிகளாகவே வருகிறார்கள்’ என்று உண்மைக்குப் புறம்பாகக் கருத்து வெளியிட்டார்கள்.

இதைவிட அகதிகள் தொடர்பில் லேபர் கட்சியை விடவும் மிக மூர்க்கமான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பவர்கள் இவர்கள். இந்நிலையில் இருபெரும் கட்சிகளுமமே தமிழ் மக்கள் தொடர்பில் எவ்விதத்திலும் கரிசனை கொண்டவர்களில்லை.

கடந்த தேர்தலில் போட்டியிட்டவைகளும் தமிழ்மக்களின் மேல் கரிசனையும் அகதிகள் தொடர்பில் சாதகமான நிலைப்பாடும் கொண்டவைகளாக நாம் மூன்று கட்சிகளைக் குறிப்பிடலாம்.

1. கிறீன் கட்சி (Green Party)
2. சோசலிசக் கூட்டமைப்பு (Socialist Alliance)
3. ஜனநாயக தொழிற்கட்சி (Democratic Labour Party)

இந்த மூன்றுமே தமிழரின் இனப்பிரச்சனை தொடர்பிலும் அகதிகள் தொடர்பிலும் எமக்குச் சாதகமான பார்வையைக் கொண்டிருப்பவை. கடந்த தேர்தலில் இம்மூன்று கட்சிக்கும் தமிழ்மக்களின் ஆதரவு வழங்கப்பட்டிருந்தது.

இவற்றுள் சோசலிசக் கூட்டமைப்பென்பது (Socialist Alliance) நாடாளுமன்றம் மட்டுமே ஒரு தீர்வாக அமைந்துவிடாதென்றும் நாடாளுமன்ற ஆட்சிமுறையில் ஒப்புதலில்லையென்றும் கொள் கையை வைத்துக்கொண்டு செயற்படும் ஓர் அமைப்பு. மிகமிக அடிமட்டத்தில் மூர்க்கத்தனமாக அரசியற் போராட்டங்களையும் செயற்பாடுகளையும் முன்னெடுத்துக்கொண்டிருக்கும் இவ் வமைப்பு தேர்தல் வரும்போது மட்டுமே செயற்படும் ஏனைய அமைப்புக்களிலிருந்து முற்றிலும் வேறு பட்டது. ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டம் தொடர்பில் நீண்டகாலமாகவே தீவிர ஆதரவோடு செயற்பட்டு வருகிறது இவ்வமைப்பு. ஈழத்தமிழர்கள் வீதிகளில் இறங்கிப் போராடிய காலங்களிலெல்லாம் எங்களோடு ஒன்றாக நின்றவர்கள் இவர் கள்தாம்.

இன்றும்கூட தமிழ் அகதிகள் பிரச்சனை என்றுவரும்போது தமிழ்ச்சமூகத்தைவிடவும் மிக மும்முரமாக நின்று போராடிக் கொண்டிருப்பவர்கள் இக்கட்சியினரே. நாடுகடத்தப்படவிருந்த தமிழரை சாலைமறியற்போராட்டம் செய்து தடுத்து நிறுத்தப் போராடியது தொடக்கம் இக்கட்சியினரின் தீவிர பங்களிப்பு எங்குமே நிறைந்திருக்கின்றது.

அடுத்ததாக கிறீன் கட்சி. அவுஸ்திரேலியாவில் இரு முதன் மைக் கட்சிகளுக்கும் அடுத்தபடியாக மாற்றுச் சக்தியாகப் பரி ணமித்துக் கொண்டிருப்பது இக்கட்சிதான். வளர்ந்து வரும் இக்கட்சி ஒவ்வொரு தேர்தலிலும் முன்றேிக்கொண்டே தான் இருக்கின்றது. கிட்டத்தட்ட நூற்றாண்டுகாலம் லேபர் கட்சியின் அசைக்க முடியாத கோட்டையாகவிருந்த மெல்பேண் தொகு தியைக் கடந்த தேர்தலில் தட்டிப்பறித்ததோடு இக்கட்சி எல்லோரினதும் புருவத்தை உயர வைத்தது. நாடாளுமன்ற அவையில் இந்த ஓர் ஆசனத்தை வைத்துக்கொண்டு இயன்ற வரை செயலாற்றியது.

இம்முறை எப்பாடு பட்டாவது மெல்பேண் தொகுதியில் கிறீன் கட்சியை வெல்லவிடுவதில்லையென்று இரு முதன்மைக் கட்சிகளுமே கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்டன. உண்மையில் கிறீன் கட்சியின் ஆதரவாளர்கள்கூட ஓரளவு பயந்துதான் போனார்கள். இம்முறை கிறீன் கட்சி மெல்பேணில் வெல்லமுடியுமா என்ற கேள்வி இத்தேர்தலின் முதன்மை விடயங்களுள் ஒன்றாக இருந்தது. அதுவும் இரு முதன்மைக் கட்சிகளுமே அகதிகள் தொடர்பில் கடுமையாக நடந்துகொள்வதில் போட்டிபோட்டுக்கொண்டு தேர்தலைச் சந்தித்த நேரத்தில், அகதிகள் விடயத்தில் நேர்மாறான நிலைப்பாட்டைக் கொண்டி ருக்கும் கிறீன்கட்சிக்கு மெல்பேண் ஆசனம் கிடைக்குமா என்பது பெரிய ஐயமாகவே இருந்துவந்தது. அதுவும் அக்கட்சியின் வேட்பாளர் மிகத் தீவிரமாகவே அகதிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருபவர். இத்தேர்தலிலும் வெற்றி தோல்வி பயத்துக்கு அப்பால் அகதிகள் விடயத்தில் தனது நிலைப்பாட்டை பகிரங்கமாகவும் உரத்தும் சொல்லித்தான் அவர் தேர்தல் பரப்பு ரைகளை நிகழ்த்தினார்.

இந்நிலையில் ஐயமாகவிருந்த அவரது வெற்றி ஐயத்துக் கிடமின்றி உறுதிசெய்யப்பட்டது. இரு பெரும் கட்சிகளும் வாக்கு வேட்டைக்காக அகதிகளைத் தாக்கிக்கொண்டிருக்க அதற்கு நேர்மாறான நிலைப்பாடெடுத்து வாக்குகளை வேட்டையாடி மெல்பேண் தொகுதியில் தொடர்ந்தும் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது கிறீன் கட்சி.

ஏற்கனவே ஒரு செனட்டரைக் கொண்டிருக்கும் ஜனநா யகத் தொழிற்கட்சியும், இம்முறை ஆறு செனற்களையும் ஒரு நாடாளுமன்ற ஆசனத்தையும் கொண்டிருக்கும் கிறீன் கட்சியும், இத்தேர்தலில் எவ்வித வெற்றியையும் பெறாதபோதும்கூட எந் நேரமும் எமக்காகப் போராடிக்கொண்டிருக்கும் சோசலிசக் கூட்ட மைப்பும் எந்நாளும் எமக்காகக் குரல் கொடுப்பார்கள் என்பதில் ஐயமில்லை. தனியே பெருங்கட்சிகளின் பின்னால் அலை வதும் அவர்களுடன் மட்டுமே எமது அரசியற் செயற்பாடுகளை முடக் குவதும் பயனற்றது. பல்வேறு தளங்களில் எமக்கு ஆதரவுத் தளங் களைப் பெருக்க வேண்டும். சிறுகட்சிகள், கூட்டமைப்புக்கள் என்பவற்றுள் எமது அரசியற் செயற்பாடுகள் பெருக வேண்டும். எமக்குரிய பலமான ஆதரவுத் தளத்தை சிறுகட்சிகளிடத்தில் பெருக்க வேண்டும்.

# நம்மவர் நிகழ்வுகள்

## விக்டோரியா மாநிலத்தில்

| | |
|---|---|
| 4th May 2013 | Innisai Maalai 2013 by D.C.A |
| 4th May 2013 | Kundhavi Kaviyam' by Dhamayanthy Balaraju |
| 12th May 2013 | Thamil Literature Programme by CTM |
| 18th May 2013 | Mullivaikkal Remembrance Day 2013- Tamil Co-ordinating Committee |
| 1st June 2013 | Tyagaraja Festival 2013 - Day 1 - by The Academy of Indian Music |
| 2nd June 2013 | Tyagaraja Festival 2013 - Day 2 - by The Academy of Indian Music |
| 2nd June 2013 | Sugamaana Geethangal Music Program 2013 by Vijey Entertainment Aust |
| 9th June 2013 | T.T Jeyaratnam's 100th year remembrance day-Mahajanans of Vic |
| 23rd June 2013 | Ilam Thentral Music Program by Mandralaya arts & vedic centre |
| 14th July 2013 | Thillai Natanalaya Dance show by Dhamayanthy Balaraju |
| 20th July 2013 | BLOOD-O-THON to remember 83 Black July by TRO Australia |
| 27th July 2013 | 83 Black July 30th Anniversary Event by ATS |
| 11th Aug 2013 | Tamil Cultural Programme |
| 17th Aug 2013 | Annual Musical night and Dinner by JHC OBA Vic |
| 24th Aug 2013 | CHULIPURAM VICTORIA COLLEGE O.S.A DINNER |
| 31st Aug 2013 | The Tamil Competition 2013 (Victoria) by ASoGT |
| 28th Sept 2013 | Miruthanga Arangetram - IAA |
| 29st Sept 2013 | Thiyagi Thileepan Rememberance Programme - TCC Vic |
| 27th Nov 2013 | Maveerar Remembrance Day 2013 - Tamil Co-ordinating Committee |
| 14th Dec 2013 | Laughing Co Laughing 2013 -Australian Medical Aid Foundation ( AMAF) |
| 25th Dec 2013 TRO | Australia's Annual Christmas Appeal on 3CR & 24Hr IBR |
| 5th Jan 2014 | Annual Cricket tournament by JHC OBA Vic |

***VIC - Monthly Meetings***

*Casey Tamil Mantram's Monthly Seniors Meeting (4th Saturday of Month)*
*23rd Feb, 22nd Mar, 27th April, 25th May, 29th June, 27th July, 24th Aug, 28th Sep, 26th Oct, 23rd Nov, 14th Dec*
*Time: 10.00 am - 2.30 pm @ Berwick Senior Citizens Hall, 112 High Street, Berwick, 3806*

*Tamil Senior Citizens Fellowship - Monthly Meeting (3rd Saturday of Month)*
*16th Mar, 20th Apr, 18th May, 15th June, 20th July, 17th Aug, 21st Sep, 19th Oct, 16th Nov, 7th Dec*
*Time: 11 am - 2.30 pm @ Oakleigh Hall, 142 Drummond St, Oakleigh 3166*

## நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில்

| | | |
|---|---|---|
| 14-Sep | Sat | Kalai Chuwai 2013 - Cultural program by Hartley College Past Pupils Association NSW |
| 21-Sep | Sat | Kalai Vizha 2013- Eastwood Tamil Study Centre |
| 21-Sep | Sat | Kalai Vizha 2013- Mount Druitt Tamil Study centre |
| 22-Sep | Sun | Thiyaki Thileepan's Remembrance Day- TCC |
| 22-Sep | Sun | Musical Concert Illayarajah |
| 28-Sep | Sat | Annual General Meeting - Tamil Senior Citizens' Association NSW Inc. |
| 28-Sep | Sat | Annual Dinner - Methodist Girls High School |
| 28-Sep | Sat | Annual General Meeting - Australian Tamil Congress (ATC) |
| 29-Sep | Sun | NADHAM - Sublime Musical Journey - Swara- Laya |
| 5-Oct | Sat | Thulir 2013- Voice of Tamils (VOT) |
| 6-Oct | Sun | Velu Naachchiyar -a historical Tamil Ballet - Transnational Government of Tamil Eelam ( TGTE) |
| 12-Oct | Sat | Fellowship Dinner - Consortium of Tamil Associations (NSW) |
| 19-Oct | Sat | Seran's Dance Performance in Aid of Patchwork |
| 19-Oct | Sat | Jaffna College Alumni Association Silver Jubilee celebrations |
| 26-Oct | Sat | Kamban Vizha 1 st Day- Kamban Kazhagam |
| 26-Oct | Sat | Arangadal 2013 -Jaffna University Graduates Association |
| 26-Oct | Sat | Thillaana -3 - Sydney Tamil Manram |
| 26-Oct | Sat | General Election -Transnational Government of Tamil Eelam ( TGTE) |
| 27-Oct | Sun | Kamban Vizha 2 nd Day- Kamban Kazhagam |
| 2-Nov | Sat | Tamil Cultural Event - Australian Tamil Association (ATA) |
| 9-Nov | Sat | Tamil Osai Ilakkiya Vizaa |
| 21-Nov | Thurs | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 22-Nov | Fri | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 23-Nov | Sat | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 24-Nov | Sun | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 25-Nov | Mon | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 26-Nov | Tues | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 27-Nov | Wed | Maveerar Remembrance Day 2013 - Tamil Co-ordinating Committee |
| 30-Nov | Sat | AGM- Eastwood Tamil Study Centre |
| 8-Dec | Sun | Muththamil Maalai 2013 -Australian Medical Aid Foundation ( AMAF) |
| 14-Dec | Sat | Wentworthville Tamil Study Centre- Prize giving and AGM |
| 14-Dec | Sat | Annual Dinner and Presentation Night - Eastwood Tamil Study Centre |
| 25-Dec | Wed | Christmas |
| 31-Dec | Tues | End New Year |




ஈழமுரசு

அஞ்சல் தொடர்புகளுக்கு
Eelamurasu
P.O.Box 80
Kingsville
Vic 3012 Australia

ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
emurasu@gmail.com

விளம்பர விநியோக
தொடர்புகளுக்கு
advertise@eelamurasu.com.au
0402948607

வருட சந்தா
$ 60.00
மட்டுமே

குறிப்பு
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

COMMUNITY NEWSPAPER ASSOCIATION
MEMBER
OF VICTORIA

# ஆசிரியர் தலையங்கம்

முரசு - 22 முழக்கம் - 298

## திணிக்கப்படும் மாகாணசபைத் தேர்தலும் தீர்மானிக்க வேண்டிய தமிழ் மக்களும்

ஒருவழியாக வடமாகாணசபைத் தேர்தல் எமது தாயகத்தில் நடைபெறும்நாள் நெருங்கிக்கொண்டிருக்கின்றது. அரசியற்கட்சிகள் மும்முரமாக தமது பரப்புரைகளை மேற்கொண்ட வண்ணமுள்ளனர்.

ஆனால் இந்த வடமாகாணசபைத் தேர்தலென்பது எமது மக்களால் ஆர்வத்தோடு விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டதன்று. மாறாக எமது மக்கள்மீது திணிக்கப்பட்ட ஒன்று என்றே சொல்ல முடியும். தொடர்புடைய தரப்பான தமிழ்மக்களின் விருப்பு வெறுப்புக்கு அப்பால் வெவ்வேறு சக்திகளின் சதிராட்டத்தில் பகடைக்காயாக உருட்டி விளையாடப்பட்டுக் கொணடிருப்பதே இந்த மாகாணசபையும், 13ஆம் திருத்தச்சட்டமும், எமது மக்களின் அரசியல் உரிமைக்கான வேட்கையும்.

மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியத்தின் தற்போதைய பிரதிநிதிகள் என்று இனங்காணப்படும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுவது தமிழர் நலனுக்கு உகந்ததா இல்லையா என்ற விவாதங்கள் இன்னமும் சூடாகவே இருக்கின்றன. திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் தமிழ்ச்சிவில் சமூகப் பிரதிநிதிகள் பலரும் இதை எதிர்த்தே வருகின்றனர். இருந்தபோதும் வடமாகாணசபைத் தேர்தல் தமிழ்மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அதில் போட்டியிடுவது என்று களமிறங்கிவிட்டது. முதன்மை வேட்பாளர், ஏனைய வேட்பாளர் தெரிவுகளில் நிகழ்ந்த இறுபறிகளுக்குப்பின்னர் தற்போது பரப்புரைகளில் மும்முரமாக த.தே.கூ. ஈடுபட்டுள்ளது.

இந்த மாகாணசபைத் தேர்தல் எமது மக்கள்மீது திணிக்கப்பட்டது போன்றே இத்தேர்தலில் த.தே.கூட்டமைப்புக்கு வாக்களித்து அதை வெல்லவைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. த.தே.கூ. செய்வது சரியா, இதில் போட்டியிடுவது சரியா, அதன் வேட்பாளர் தெரிவுகள் சரியா, அதன் தேர்தல் விஞ்ஞாபனம் சரியா, வேட்பாளரின் பரப்புரைகளில் சொல்லப்படும் கருத்துக்கள் சரியா என்று ஆராய்ந்து அவற்றை விமர்சனபூர்வமாக அணுகுவதற்கான கால அவகாசமோ களச்சூழ்நிலையோ இன்றில்லை. த.தே.கூட்டமைப்பின் தலைமைப்பொறுப்பிலிருப்பவர்களின் கருத்துக்கள், நடைமுறைகள், கூட்டமைப்பு வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனம் என்பவை விமர்சனத்துக்குரியவையாக இருந்தபோதும் வேறுவழியின்றி த.தே.கூட்டமைப்புக்கு ஆதரவளித்தே தீரவேண்டிய காலநிர்ப்பந்தத்தை தமிழினம் எதிர்கொண்டுள்ளது.

த.தே.கூட்டமைப்பின் தோல்வி தமிழ்த்தேசியத்தின் தோல்வியாக உலகுக்குக் காட்டப்படக்கூடும் என்பதாலும், தமிழ்த்தேசியத்துக்கு எதிரான சக்திகள் ஆட்சிக்கு வந்துவிட்டால் நீண்டகால அடிப்படையில் அது தமிழினத்துக்கு ஆபத்து என்பதாலும் இத்தேர்தலில் த.தே.கூட்டமைப்பை வெல்லவைத்தே ஆகவேண்டுமென்ற கட்டாயத்துக்கு தமிழ்மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். அதாவது ‘காவடி தூக்கியாகவிட்டது, ஆடித்தான் ஆகவேண்டும்’ என்ற நிலையிலேயே தமிழ்மக்கள் தேர்தலை எதிர்கொள்கிறார்கள். காவடியைத் தன்னிச்சையாகத் தூக்கியதென்னவோ கூட்டமைப்புத்தான். ஆனால் சுமத்தப்பட்டது எமது மக்கள்மீது, ஆட வேண்டியதும் எமது மக்கள்தான்.

இந்நிலையில், வடமாகாணசபைத் தேர்தலில் த.தே.கூட்டமைப்பை வெல்லவைக்க வேண்டியது தாயகத்திலுள்ள தமிழ்மக்களினதும், அதற்குரிய உதவிகளைச் செய்வது புலத்திலுள்ள தமிழர்களதும் கடமையாகவும் உள்ளது. விரும்பியோ விரும்பாமலோ இக்கடமை எம்மீது திணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்மக்களின் இக்கையறு நிலையைத் தமக்குச் சாதகமாக வைத்துக்கொண்டு த.தே.கூட்டமைப்பு தொடர்ந்தும் தன்னிச்சையாகச் செயற்பட்டுக்கொணடிருக்க முடியாது. அதாவது, தாம் என்ன முடிவெடுத்தாலும் மக்கள் தமக்கு வாக்குப்போட்டு தம்மைக் காப்பாற்றியே ஆகவேண்டுமென்ற யதார்த்த நிலையை தமது சுயநலன்களுக்குப் பயன்படுத்தி தான்தோன்றித்தனமான அரசியலை கூட்டமைப்பு செய்ய முற்படக்கூடாது என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும்.

இத்தேர்தலில் எந்த முடிவு வந்தாலும், தமிழ்மக்கள் மாகாணசபை அடிப்படையிலான தீர்வை ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்றோ பிரிந்த வடக்கு கிழக்கை ஏற்றுக்கொண்டார்கள் என்றே எமது எதிரிகள் உலகுக்குப் பரப்புரை செய்யப் போகிறார்கள். இந்த அச்சத்தாலேயே கூட்டமைப்பு இதில் போட்டியிடக்கூடாது என்று மக்கள் தலைவர்கள் பலர் கருதுகின்றார்கள். இப்படியாக எதிரியிடமிருந்து வரும் கருத்துக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து வந்தாற்கூட வியப்படைய ஏதுமில்லை என்ற நிலையில்தான் கூட்டமைப்பு இருக்கின்றது. கடந்தகாலத்தில் நடந்த ஒரு தேர்தல் முடிவு தொடர்பில் கருத்துக்கூறும்போது ‘இத்தேர்தலில் மக்கள் எம்மை அமோக வெற்றியடைய வைத்ததன்மூலம் நாம் வைத்த சமஸ்டி அடிப்படையிலான தீர்வை ஏற்றுக்கொண்டதோடு, தனிநாட்டுக்கான கோரிக்கையை நிராகரித்துள்ளார்கள்’ என த.தே.கூட்டமைப்பின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான திரு. சுமந்திரன் கூறியிருந்ததை இங்கு நினைவுகொள்வது சாலப்பொருந்தும்.

இதேபோன்று இந்த மாகாணசபைத் தேர்தல் முடிவிலும் விதம்விதமான வியாக்கியானங்கள் கூட்டமைப்புக்குள்ளே இருந்துகூட வர வாய்ப்புண்டு. ஒருபுறம் தேசியத் தலைவரையும், மாவீரர்களையும் எமது ஆயுதவழி விடுதலைப் போராட்டத்தையும், விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தையும் புகழ்ந்து திரு குருகுலராஜா, திரு பசுபதி போன்றோரும் சில இளம் வேட்பாளர்களும் பகிரங்கமாகவே தேர்தல் பரப்புரை செய்துகொண்டிருக்கும் வேளையில், மறுபுறம், ‘விடுதலைப்புலிகள் தான் தனிநாடு கேட்டார்கள், அதனால்தான் இந்த நிலையில் நிற்கின்றோம், நாங்கள் கேட்பது சமஸ்டிதான், அதைப் பெற்றே தீருவோம்’ என்ற பாணியில் கூட்டமைப்பின் தலைவர்கள் பரப்புரை செய்வதும் நடந்துகொண்டுதான் உள்ளது.

இந்நிலையில், திணிக்கப்பட்ட இந்த மாகாணசபைத் தேர்தலில் த.தே.கூட்டமைப்பை வெல்லவைக்க வேண்டியது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் எமது கடமை என்பதைத் தமிழ்த்தேசியத்தில் விருப்புள்ள அனைவரும் உணர்ந்து செயற்படும் அதேவேளை, வேறு தெரிவற்ற நிலையில் மக்கள் அளிக்கும் வாக்குகளை தமக்கான அங்கீகாரமாக எண்ணி அகங்காரத்தோடு தாம் நினைத்தபடி விளக்கங்களை அளிப்பதையோ தன்னச்சையாகச் செயற்படுவதையோ கூட்டமைப்பு தவிர்த்துக்கொள்ள வேண்டும்.



அறிவித்தல்

வாசகர்கள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவரும் ஈழமுரசிற்கான உங்களது ஆக்கங்கள் மற்றும் விளம்பரங்கள் ஆகியவற்றை மேலுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

– நிர்வாகம்

# பிள்ளையும் ஜெனிவாவும் கிடுக்குப்பிடிக்குள் இலங்கை

## தாயகத்திலிருந்து ஜெயம்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையாரின் ஒரு வாரகால இலங்கைப் பயணத்தால் இலங்கை அரசு ஆடி அதிர்ந்து போயிருக்கிறது. எவரது சலசப்பையும் கவனத்திற்கொள்ளாது கருமமே கண்ணாயிருந்து அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துவிட்டு ஜெனிவா திரும்பி பறந்துள்ளார் அம்மையார்.

அவர் வருகையை இலங்கை அரசு உள்ளூர விரும்பவில்லை. ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் தங்கள் நிர்வாகத்தில் மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளை ஆய்வு செய்ய வருகிறார் என்பதைவிட ஒரு தமிழ்ப் பெண்மணி தங்கள் செயற்பாட்டை மேற்பார்வை செய்வதா என்ற ஆதங்கமும், கொதிப்புணர்வுமே இலங்கை அரசை அதிகமாக ஆட்டிப்படைக்கின்றன.

இதனால்தான் அடுத்த வாரமளவில் நவநீதம்பிள்ளைக்கு அதிருப்தி தெரிவித்து ஐ.நா. செயலருக்கு இலங்கை அரசு கடிதம் அனுப்பி வைக்கவுள்ளது.

நவநீதம்பிள்ளை நாட்டிலிருக்கும் போதே சில அமைச்சர்கள் ஆங்காங்கே அவர்மீதான தமது வெறுப்புணர்வுகளைக் கொட்டித் தீர்த்திருந்தனர். தனது வயதையும், பதவி நிலையையும் கருத்திற்கொள்ளாது நவநீதம்பிள்ளை ஒரு தமிழச்சி என்ற காரணத்தால் அவரது பதவிநிலையையும் மறந்து பாலியல் ஏளனம் செய்திருக்கிறார் அமைச்சர் மேர்வின். இதுபற்றி நிருபர்கள் கேள்விகள் எழுப்பிய போது, வேறுசில அமைச்சர்களோ - ஒருவர் தனது திருமண ஆசையை வெளியிடுவதில் என்ன தவறு என்ற வகையில் முட்டாள்தனமான அநாகரிக நினைப்புகளைக் கொட்டித் தீர்த்திருந்தனர்.

உலகின் மிகப்பெரிய அமைப்பான ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் ஒரு பெண் என்ற காரணத்தால் இலங்கையில் மனித உரிமை மீறலை அனுபவித்திருக்கிறார் என்பதை இலகுவில் புறந்தள்ளிவிட முடியாது. இதன் விளைவுகளை இலங்கை அரசு விரைவில் உணரக்கூடும்.

இந்த நிகழ்வுகள் எல்லாம் இலங்கை அமைச்சர்களின் மனோபாவங்களையும், இலங்கை அரசின் போக்கையும் புரிந்து கொள்வதற்கு நவநீதம்பிள்ளை அம்மையாருக்குப் பெரிதும் உதவியிருக்கின்றன. தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் சித்திரவதைகளின் பெறுமானத்தை அவருக்கு உணர்த்தியிருக்கின்றனர்.

தனது இலங்கை விஜயத்தின் இறுதி நிகழ்வாக இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது நவநீதம்பிள்ளை அம்மையார் தெரிவித்த கருத்துகள் இலங்கை அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பவையாக அமைந்திருந்தன.

பாலியல் வன்புணர்வு தொடர்பில் அவர் கவலை தெரிவித்திருக்கிறார். அபிவிருத்தி என்பது பௌதிக வளங்களை மாத்திரம் சார்ந்தவையல்ல என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். உறவுகளைப் பறிகொடுத்தோரின் துயர உணர்வுகள் மதிக்கப்படாதிருக்கும் வரையில் நல்லெண்ணம், இனங்களுக்கிடையிலான உறவுசார்ந்த முன்னேற்றம் என்பவற்றுக்கான வாய்ப்பே இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார். மொத்தத்தில் இலங்கை அரசின் நான்காண்டு காலச் செயற்பாடுகள் திருப்திப்படும் வகையில் அமையவில்லை என்பதை அவர் துல்லியமாகப் புலப்படுத்தியிருக்கிறார்.

வடக்கு, கிழக்கு மாகாணப் பெண்கள் தொடர்பான விடயங்களில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூடிய கவனம் எடுக்கவேண்டும் என்று வற்புறுத்தியுள்ள நவநீதம்பிள்ளை அம்மையார், காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளுக்கு ஐ.நாவிலிருந்து தூதுக்குழு ஒன்றைத் தான் அனுப்பிவைக்கத் தீர்மானித்திருப்பதாகவும் அக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் கேட்டிருக்கிறார்.

முள்ளிவாய்க்கால் அவலங்கள் பற்றி மக்களுடன் உரையாடித் தெரிந்துகொண்ட மனித உரிமைகள் ஆணையாளர், தமிழ் மக்களுக்கான சிறந்த தீர்வொன்றை விரைவில் பெற்றுத்தர தனது அதிகார எல்லைகுட்பட்ட வகையில் தொடர்ந்தும் போராடுவார் என மக்களிடம் எடுத்துக்கூறியிருக்கிறார்.

9 ஆம் திகதி திங்கட்கிழமை சுவிஸ் நேரப்படி காலை 9 மணிக்கு ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை அவதானங்கள் பற்றி இடைக்கால (வாய்மூல) அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ள நவி அம்மையார், 2014 மார்ச் மாநாட்டில் விரிவான எழுத்து மூல அறிக்கை வெளியிடப்படும் என்றும் திட்ட வட்டமாக எடுத்துரைத்திருக்கிறார்.



இந்த அறிக்கை பாரதூரமாக அமையலாம் என்ற அச்சமும் அவ்வறிக்கையால் ஏற்படக்கூடிய விளைவுகளை எவ்வாறு சமாளிக்கப் போகிறோம் என்ற கவலையும் இலங்கை அரசை இப்போதே ஆட்டிப்படைக்கத் தொடங்கிவிட்டன.

இலங்கை அரசு சர்வதிகாரப் பாதையில் பயணிக்கிறது என குற்றஞ்சாட்டிய நவநீதம்பிள்ளை, பயங்கரவாதச் சட்டத்தை உடனடியாக நீக்கு, பொலிஸ் திணைக்களம் நீதியமைச்சின் கீழ் கொண்டுவா, காணாமல்போனோர் குறித்து விசாரணை நடத்த உறுதியான பொறிமுறையை உருவாக்கு என்று இலங்கை அரசிடம் அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்.

இலங்கை அரசுக்கு இந்த அபிப்பிராயங்கள் கோபத்தை உண்டாக்கிவிட்டிருக்கிறது. எங்கள் உள்விவகாரங்களில் தலையிட இவர் யார் என்ற பாவனையில் துள்ளிக் குதிக்கிறது. பொலிஸ் திணைக்களம் கடந்த முப்பதாண்டு காலமாக ஒரு படைத்தரப்பின் இயல்புடன்தான் தனது கடமைகளை மேற்கொண்டிருந்தது. அத்துடன், அநேகமான நடவடிக்கைகள் பொலிஸாரினதும் படைத்தரப்பாரினதும் கூட்டு நடவடிக்கைகளாகவே அமைந்திருந்தன. அவசரகாலச் சட்டமும், பயங்கரவாதத் தடைச்சட்டமும் இத்தகைய செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தன.

"பொலிஸார் உங்கள் நண்பன்" என்று அரசும், பொலிஸ் திணைக்களமும் பொது மக்கள் மத்தியில் அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டாலும்கூட பொலிஸ் ஓர் ஆபத்தான நண்பன் என்ற மனப்பாங்கே மக்கள் மத்தியில் காணப்படுகிறது. இப்பிழை பொலிஸாராலோ பொதுமக்களாலோ நேர்ந்ததன்று. முற்று முழுதாக ஆளுந்தரப்பினரது அடக்குமுறைகளால் உண்டானது. இத்தகைய மனப்பாங்கு அற்றுப்போக வேண்டும் என்பதுதான் நவநீதம்பிள்ளையின் விருப்பமாகத் தென்படுகிறது.

ஆனால், நவநீதம்பிள்ளையை புலிக் கண்ணாடி கொண்டு பார்க்கின்ற சிங்களத் தலைவர்களே அதிகாரத்தில் இருப்பதால் அரசுக்கு அவர் வார்த்தை கசப்பாக இருக்கிறது. அத்துடன், வடக்கு, கிழக்கு மக்கள் மத்தியில் அதிகளவில் காணப்படும் படைகள் விலக்கப்பட வேண்டும் என்று நவநீதம்பிள்ளையின் கருத்தும் அரசைச் சீற்றம் கொள்ள வைத்திருக்கிறது.

எனினும், நவநீதம்பிள்ளை நாட்டைவிட்டுச் சென்றாலும்கூட அவரின் கருத்துகள் அமைச்சர்களைப் படாதபாடுபடுத்திக் கொண்டிருக்கின்றன. விடுதலைப்புலிகளின் புலம்பெயர் வலைப்பின்னல்கள் மேற்குலக இராஜதந்திரிகளுக்குப் பணத்தை வாரி இறைத்து இலங்கைக்கு எதிராக அவர்களைச் செயற்பட வைக்கின்றன என்று ஜனாதிபதியே கூறும் அளவுக்கு நிலைமை சீர்கெட்டுப் போயிருக்கிறது.

தேசப்பற்றுள்ள இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர - "சர்வதேச விசாரணை நிச்சயம் வந்தே தீரும" என்று அடித்துக்கூறத் தொடங்கியிருக்கிறார். வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வாய்ப்புக் கிடைக்கின்ற வேளைகளில் எல்லாம் நவநீதம்பிள்ளைக்கு எதிரான கண்டனங்களையே வெளியிட்டு வருகிறார்.

2014 மார்ச்சில் இடம்பெறவிருக்கும் 25 ஆவது மனித உரிமைகள் மாநாட்டின் போது இலங்கைக்கு எதிராகக் கடுமையான தீர்மானம் முன்வைக்கப்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது. இது 19 ஆவது, 22ஆவது மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைவிட நெருக்கடியானதாக இருக்கும். முந்தைய இரு தீர்மானங்களும் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கிடைத்த சாட்சியங்களை வைத்து மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆனால், வரக்கூடிய தீர்மானமோ மனித உரிமைகள் ஆணையாளர் நேரடியாக இலங்கைக்குச் சென்று ஆராய்ந்தறிந்த அறிக்கையின் பிரகாரம் அமையப்போகிறது. எனவே, தனக்கெதிராகக் கொண்டுவரப்படும் தீர்மானத்தை வலுவிழக்கச் செய்வதற்கான ஆதரவைப் பிறநாடுகளிடம் கோருவது இம்முறை இலங்கைக்குக் கஸ்டமாக அமையலாம். அதுவுமல்லாமல் தீர்மானம் நிவேற்றப்பட்ட பின்னர் ஐ.நா சபையால் மேற்கொள்ளப்படவுள்ள செயற்பாடுகளும் இலங்கைக்குக் கடுமையான நெருக்கடியைத் தரலாம்.

இவை இரண்டும் இலங்கை எதிர்கொள்ளப்போகின்ற சிக்கலான சவால்களாக உள்ளன. இம்மாதம் நவநீதம்பிள்ளையால் மனித உரிமைகள் பேரவையில் வாய்மூலமாக வெளியிடப்படவுள்ள அறிக்கைகூட இலங்கைக்குப் பெரும் பிரச்சினையாக மாறக்கூடும் என அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

எனவே, இவற்றிலிருந்து தப்பிப்பிழைக்க வேண்டிய தேவை இலங்கைக்கு இருக்கிறது. இதற்கு இரண்டு வழிகள் காணப்படுகின்றன. ஒன்று, ஆட்சியாளர்கள் தங்களைத் தாங்களே மாற்றிக்கொள்வதுடன் ஐ.நாவின் வேண்டுகோள்படி நடந்து தமிழர்களையும் சமமான பிரஜைகளாகப் பாவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களைக்கொண்ட தமிழர் நிலப்பரப்புக்கான ஒரு தன்னாட்சி அலகை வழங்க முன் வருவது.

இரண்டாவது, தமிழர்களுக்கு எவ்வித குறையுமில்லை. நவநீதம்பிள்ளையின் அறிக்கை பிழையானது, தமிழ்மக்கள் அரசைப் பெரிதும் வரவேற்கிறார்கள். வடபகுதி மக்கள் இராணுவப் பிரசன்னத்தை மகிழ்ச்சியுடன் ஆதரிக்கிறார்கள், இராணுவம் அவர்களுக்கு ஒரு சுமையல்ல என்று உலக நாடுகள்முன் நிறுவி தன்னைக் காத்துக்கொள்வது.

அரசு இரண்டாவது வழிமுறை மூலம் தன்னைக் காத்துக்கொள்ளவே பெரிதும் விரும்புவதாகத் தெரிகிறது.

இதற்கு வடமாகாணசபைத் தேர்தலைப் பயன்படுத்த அரசு திட்டமிட்டிருக்கிறது. வடபகுதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் நோக்கமும் அதுதான். இத்தேர்தலின் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக கிடைக்கவிருக்கும் வாக்குகளையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லாத ஏனைய கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் என்பவை பெறப்போகும் வாக்குகளையும் ஒன்று திரட்டி தமிழர்கள் தன்னாட்சி அலகொன்றைக் கோரி நிற்கவில்லை என்பதற்கான ஆதாரங்களாக உலக நாடுகளிடையே காட்டத் திட்டமிட்டு வருகிறது.

ஒட்டுமொத்தமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தவில்லை என நிறுவத் துடிக்கிறது. இது சரியான செயற்பாடுதானா எனத் தமிழ்மக்கள் சிந்திக்க வேண்டும்.

இனமே திரண்டுப் போராடிக் கொண்டிருக்கும்போது தம்வயிற்றை நிரப்புவதற்காகச் சில புல்லுருவிகள் தொடர்ந்தும் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும்.

தமிழர் பட்ட துயரங்களுக்கு விடிவு காணவேண்டுமாயின் நாளைய சந்ததி தலைநிமிர்ந்து வாழவேண்டுமாயின் ஐ.நாவின் நெறிப்படுத்தலின்கீழாவது இலங்கை அரசு சரியான பாதைக்கு வந்து தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் சூழ்நிலை உருவாக வேண்டுமானால், தமிழர்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்பது தவிர்க்கமுடியாத கடமையாகிறது.

தமிழர்களைக் கொன்று குவித்துவிட்டு அந்தக் குற்றச்சாட்டுகளை உலக நாடுகளிடையே மறுத்துரைப்பதற்குத் தமிழர்களிடமே ஆதரவு கேட்கும் எட்டப்பர் வழியில் வந்துள்ள அரச தரப்பு வேட்பாளர்களுக்கு தமிழர்கள் வடக்குத் தேர்தலில் தகுந்த பாடம் புகட்ட வேண்டும். நிச்சயம் தமிழ் மண்ணில் விடிவு பிறக்கும்.




MKS Spices'n Things
proudly presents
Isaignani Padmabhushan
'Maestro' ILAYARAJA Live in Concert
...ராஜா ராஜா தான்...
Raja Raja than...
For the first time in Australia!!!
With Symphony Style Live Orchestra constituting over
50+ Musicians!! 10+ Playback Singers
FEATURING HIS GOLDEN MELODIES TO MELT MELBOURNIANS
Chitra
Karthik
Madhu Balakrishnan
Jayachandran
S.P Sailaja
Chinmayi
Karthik Raja
Bhavatharini
Ramya NSK
Sathyan
Surmukhi
Priya Himesh
Belli Raj
Senthi Dass
Airtel Anita
Priyadarshini
Sri Vardhani
TICKETS
For Online Booking
www.mks.net.au
THE PLENARY
MELBOURNE CONVENTION EXHIBITION CENTRE
1 Convention Centre Place, South Wharf 3006
Saturday 28th September 2013 6:00pm
To Advertise on this Event Please Contact 0425 755 539
MKS has organized special bus services departing from each of the outlets to & from the venue. Please reserve your seats now to avoid disappointment
Event Sponsors
KATOOMBA Growing Strong Since 1959
Indya
NAVASAKTI
Double Horse
Rabeena
VANSAN
BRITANNIA
MTR
AIR INDIA
EMS EXCHANGE
Pattu
further details contact MKS Spices'n Things
Ashwood - 9885 9932 Dandenong - 9701 3165 Preston - 9416 9011 info@mks.net.au www.mks.net.au



# ஓர்மம் குறையாத ஒற்றுமையுடன்
# தேர்தலை சந்திக்க தாயகம் தயார்



வெண்ணெய் திரண்டு வருகையில் தாழியை உடைக்க முற்பட்டிருக்கும் தன்னல கும்பலை வாக்குச்சீட்டு என்னும் ஏ.கே. 47 துப்பாக்கியை விட பவரான ஆயுதத்தால் சுட்டு விரட்டுவோம்.

எம் இனிய மக்களே.... வட மாகாணத் தேர்தலில் எட்டப்பர் வழியில் வந்துள்ள அரச தரப்பு வேட்பாளர்களை விரட்டியடித்து தமிழத் தேசியத்தை நிலைநாட்டப் புறப்படுங்கள்.

இன்று நாம் எதிர்நோக்கியிருக்கும் வடமாகாணசபைத் தேர்தலானது அனைத்து வகைகளிலும் இலங்கை சுதந்திரத்தின் பின்னர் நடைபெற்ற முன்னைய தேர்தல் களோடு ஒப்பிட்டு நோக்குகையில் வேறு பட்டதும், முக்கியமானதும், தமிழ் மக்கள் சரியான நிலைப்பாட்டை தீர்க்கமாகவும், தெளிவாகவும், தீர்மானிக்க வேண்டியதொன்றாகும்.

இதனையிட்டு தமிழ் மக்கள் சரியான தீர்மானத்தை ஏற்கனவே எடுத்துவிட்டார்கள் என்று கருதினாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகக் களமிறங்கியுள்ள சரியாகச் சொல்வதானால் பேரினவாதத் தரப்பால் தமிழ் வாக்குகளை சிதைப்பதற்காக களமிறக்கப்பட்டுள்ளவர்கள் மட்டில், வடக்கு மக்கள் உரிய கவனத்தைச் செலுத்த வேண்டும்.

ஜனாதிபதி ராஜபக்ச தரப்பும், இராணுவத் தரப்பும், தமிழ் மக்களை வகைதொகையின்றி கொன்றொழித்துள்ளன. சர்வதேச சட்ட திட்டங்களுக்கு மாறாக போரின்போது இரசாயன கொத்துக் குண்டுகளையும், ஆயுதங்களையும் பயன்படுத்தி தமிழ் இனத்தை அழித்துள்ளனர்.

மேலும், சர்வதேசத்தால் கண்டிக்கப்படு மளவிற்கு தமிழர்களுக்கெதிராக மனித உரிமை மீறல்களையும், போர்க்குற்றங்களையும் புரிந்துள்ளனர்.

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் ஆண்களும், பெண்களுமாக பல ஆண்டுகளாக எவ்வித விசாரணைகளுமின்றி அரசியல் கைதிகளாக சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

எண்பத்தாறாயிரத்திற்கு அதிகமான பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும், ஏனையோரும் அங்கவீனமானோராக்கப்பட்டு சுயவாழ்வு பறிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

குடும்பத்தலைமையை ஏற்றுள்ள விதவைகள் உட்படப் பல பெண்கள் பாலியல் அச்சுறுத்தல்க ளுக்கும், வல்லுறவுகளுக்கும் உள்ளாக் கப்படுகின்றனர்.

தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் படைத்தள விஸ்தரிப்புக்காக சுவீக ரிக்கப்பட்டுள்ளன சிங்கள குடியேற்றங்களுக்காக அரசுடமை யாக்கப்பட்டுள்ளன.

வடபகுதியில் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்களில் தென்னிலங்கை வேலையாட்களே முன்னிலைப்படுத்தப்படுகின்றனர். வடபகுதி தமிழர்களுக்கு வேலைவாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. வடபகுதி சிவில் நிர்வாகத்தில் படைத்து அத்துமீறி தலையிட்டு தமிழ் மக்களின் அன்றாட செயற்பாடுகளிலும், இயல்பு வாழ்க்கையிலும் பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

தமிழர்களின் பேச்சுரிமை, ஊடகச் சுதந்திரம் அனைத்தும் படைத்தரப்பினரால் கண் காணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றன.

தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறும் அனைத்து சமூக நிகழ்வுகளுக்கும் படை யினரின் அனுமதி பெறப்படவேண்டிய நிலை காணப்படுகின்றது.

இப்பகுதியில் உருவாகும் மற்றும் காலி யாகும் வேலைவாய்ப்புகள் யாவும் அரசின் அடிவருடிகளுக்கே வழங்கப்படுவதால், தகுதியுள்ளவர்கள் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றனர்.

இறந்த படையினர் குடும்பங்களுக்கு இழப்பீடுகளையும், வாழ்வாதார வசதிக ளையும் வழங்குவதுடன் அவர்களை நினைவு கூர்ந்து வருடந்தோறும் வெற்றிவிழாக்களை நடத்தும் அரசு, எமது தமிழ் இறந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதையும் குற்றமாகக் காண்கின்றது. அஞ்சலி நிகழ்வுகளை தடைசெய்கின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழர்களின் அரசியல் சுதந்திர உரிமைகள் யாவும் மறுக் கப்பட்டு அரசியல் தீர்வு மறுக்கப்பட்டுள்ளது.

இச்செயற்பாடுகளின் பின்னனி யாதெனில், நாட்டில் முழுமையாக தமிழர்களின் பொருளாதாரத்தைச் சிதைத்து இன அழிப்புச் செய்து அவர்களின் இருப்பை நிர்மூலமாக்கி இந் நாட்டை எதிர்காலத்தில் தனிச்சிங்கள பௌத் தமாக மாற்றுவதுதான்.

இத்தமிழின ஒழிப்பில் உன்னிப்பாகவும், துரிதமாகவும், செயற்படும் அரசிற்கும், அவர் களை சார்ந்தோருக்கும் நாம் வாக்களித்து அரசின் திட்டமிட்ட தமிழின அழிப்புக்கு தமிழராகிய நாம் அங்கீகாரம் அளிப்பதாக சர்வதே சத்துக்கு எடுத்துக்கூறப்போகிமா? அல்லது எமது வீட்டுச்சின்னத்திற்கு வாக்களித்து எம் இருப்பை உறுதிப்படுத்தவே நாம் குறியாக இருக்கிறோம் என்ற உறுதிப்பாட்டை சர்வதேசத்திற்கு எடுத்துக்கூறப் போகிறோமா?

இந்த இரண்டில் ஒரு கேள்விக்கே நாம் உறுதியான பதிலை தெரிவுசெய்ய வேண்டும். இந்தக் கேள்விக்கு தமிழ் மக்கள் அரசு சார்பாகவே பதிலளிக்க வேண்டுமென அரசு தீவிர ஆர்வம் கொண்டுள்ளது. அம்முயற்சியை வெற்றிபெறச் செய்ய எம் கையாலேயே எம் கண்ணைக் குத்தும் முயற்சியிலேயே அரசு ஈடுபட்டுள்ளது.

அதற்காகவே சலுகைகளுக்கும், வசதி வாய்ப்புக்கும் சோரம் போகும் எம் மத்தியிலுள்ள கொள்கையற்ற சில தமிழர்களைத் தேர்ந்தெடுத்து தேர்தலில் நிறுத்தியுள்ளது. அதுமட்டுமல்ல, தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடித்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு சாதகமான மொத்த வாக்கு எண்ணிக்கையை குப்பதற்காக பல தமிழ்ச் சுயேச்சைக் குழுக்களை தேர்தலில் நிறுத்தி மில்லியன் கணக்கான பணத்தையும் செலவிடுகிறது.

கோடாரிக்காம்புகளான சில எட்டப்பன் கூட்டத் தமிழர்கள் தமது சுயநலன்களுக் காகவும், சொந்த வசதி வாய்ப்புகளுக்காகவும், தமிழ் மக்களின் உரிமைகளையும், வாழ் வாதாரங்களையும், தன்மான உணர்வுகளையும் அரசுக்கு அடிமை சாசனம் எழுத முயற்சிக் கிறார்கள். அதே இடத்தில் தமிழ்க் கூட்டமைப்பு தமது நலன்கள் அனைத்தையும், புறந்தள்ளி தமிழ் மக்களின் இழந்த உரிமைகளை மீட் டெடுக்கவும், மேலும் அபகரிக்கப்படவுள்ள உரிமைகளை பாதுகாக்கவும், அரசிற்கெதிராக தீவிரமாகவும், துணிவாகவும், பற்றுறுதியுடனும் களத்தில் நின்று போராடுகிறது.

இவர்களுக்கு வாக்களித்து இழந்தவற் மீளப்பெற்று இழக்கவிருப்பதை தற்காத்து உரிமையுள்ள தமிழர்களாக வாழப்போகிமா? அல்லது அவர்களுக்கு வாக்களித்து ஏற்கெனவே இழந்தவற்றுடன் இருப்பவற்றையும் இழக்கப் போகின்றோமா?

யுத்தத்தில் பெற்ற தோல்வியுடன் அனைத்தையும் இழந்துவிட்ட எம்மிடம் எஞ்சியிருக்கும் ஒரே பலம் ‘வாக்குச்சீட்டு’ என்ற ஏ.கே. 47 துப்பாக்கியிலும் அதிக பலம் வாய்ந்த ஆயு தத்தை நம் கையிலேயே பலமாக வைத் திருந்து எதிரியைத் தாக்கி விரட்டியடிக்க ஒரு மனதுடன் முயற்சிக்கவேண்டும்.

இந்த ஏ.கே. 47 துப்பாக்கியைவிட சக்தி வாய்ந்த ஆயுதத்தை நாம் எமது இருப்பைத் தக்க வைத்து பாதுகாக்கப் பயன்படுத்தலாம். அப்படிப் பயன்படுத்துவதற்கு சக்திவாய்ந்த வாக்குச்சீட்டான இவ்வாயுதத்தை நாம் இறுக்கமாக எம் கைகளிலேயே பற்றிப்பிடித்திருக்க வேண்டும். இப்படி வைத்திருப்பதற்கு எமது வாக்குகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்படவேண்டும்.

மாறாக எதிரிகளிடம் எமது கையிலிருந்த ஏ.கே. 47ஐ விட சக்தி வாய்ந்த ஷவாக்கு’ என்ற ஆயுதத்தை பறிகொடுத்தால் நாம் தாக்கியழிக்கப்படும் நிலைக்குத் தள்ளப் படுவோம் என்பதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

சகல அதிகாரமும், விட்டுக் கொடுக்காத பிடிவாதத்தன்மையும், அசுரத் தன்மையும் கொண்ட அரசினதும், இனவாதிகளினதும், கெடுபிடிகள் மத்தியில் எதுவித பலமுமற்ற வெற்று மனிதர்களாக கலங்கி நிற்கிறார்கள் தமிழ்த் தலைவர்கள்.

தாம் தக்கவைத்துக் கொண்டிருக்கும் நாடாளுமன்ற பதவிகளால் எதுவும் செய்ய முடியாத இரண்டும் கெட்டான் நிலையில், கத்தியின்மேல் நடப்பவர்களாகத் தத் தளிக்கும் இவர்களின் நிலைமையை, இவர்கள்மீது குற்றங்கண்டு விமர்சிப்பவர்களும், தமிழ் மக்களும்கூட புரிந்துகொள்ள வேண் டும். இவர்களில் எத்தனை பேர் புல னாய்வுத்து விசாரணைகளுக்கும், கெடுபிடி களுக்கும் உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**அவுஸ்திரேலியா வாழ் ஈழத்து உறவுகளே!**

**எதிர்வரும் 21ஆம் நடைபெறவுள்ள வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியை உறுதிசெய்வதன் மூலமே எமது எதிர்கால நகர்வுகளை மேற்கொள்ள முடியும். எனவே அதன்பொருட்டு ஈழத்து உறவுகளிடம் தவறாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு நீங்களும் ஒருமுறை அறிவுறுத்துங்கள். இதுவே தற்போது இங்குள்ள உங்களால் இந்தத் தேர்தலில் செலுத்தக்கூடிய பங்களிப்பாக உள்ளது.**

இவர்களது நாடாளுமன்ற பதவிகளைப் பறிக்கும் படியும், அவர்களை கைதுசெய் யும்படியும், பேரினவாதத் தரப்பால் எழுப்பப்படும் கூக்குரலையும், நாம் கணக்கிலெடுக்கவேண்டும். இத்தனை கெடுபிடிகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கு மத்தியி லும் கொண்ட கொள்கையில் பற்றுறுதியுடன் செயற் பட்டு எமது பிரச்சினைகளை சர்வதேசத்திற்கு எடுத்துச் செல்லும் துணிவு ஒன் எமது பலமாக சர்வதேச ரீதியில் காணப்படுகிறது.

இந்தப் பலத்தை தக்கவைத்து தமிழினத்தின் ஒட்டுமொத்தமான தேவைகளையும், கோரிக்கைகளையும், சர்வதேசத்திற்கு எடுத்துக்கூற இவர்களை விட்டால் எமக்கு வேறு யார் இருக்கிறார்கள் என்பதை நாம் ஆராயவேண்டும்.

போரின் அவலங்களையும், தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் இழப்புகள் அனைத்தையும் இவர்கள் தீர்க்கமான முறையில் சர்வதேசத்திற்கு எடுத்துரைத்ததன் காரணமாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தொடர்ச்சியாக இரு தீர்மானங்கள் அமெரிக்காவின் முயற் சியில் நிறைவேற்றப்பட்டதும், அதன் பின் விளைவாக மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை சென்ற மாத இறுதியில் இங்கு வந்து பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்ததும், போர் அனர்த்த விவரங்களைத் திரட்டியதுமாகும்.

இவ்விஜயத்தின் பயனாக எதிர்காலத்தில் நாம் எதிர்பார்க்கக்கூடிய எமக்குச் சார்பான பல விடயங்களையிட்டு ஊடகங்களில் கோடி காட் டப்பட்டுவருவதை நிதர்சன மாகக் காண்கிறோம். இவ்வடமாகாணத் தேர்தல் முடிவுகளை சர்வதேமும் உன் னிப்பாகக் கவனித்து தமிழ் மக்கள் என்ன சொல்லப்போகிறார்கள் என்பதை எதிர்பார்த்துக் காத் திருக்கின்றது.

இந்த எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வகையில் நாம் பதிலளித்து நலன்பெற வேண்டுமானால் எமக்கு கூட்டமைப்பிற்கு வாக்களிப்பதை தவிர வேறு வழியில்லை. வடக்கில் குறைந்தபட்சம் 30 ஆசனங்களையாவது பெறவைப்பதோடு ஒவ்வொரு தமிழரும் வேட்பாளராக மாறி வாக்கு வேட்டையிலும் இறங்கி செயற்படவேண்டும். வட மாகாணத் தமிழ் மக்கள் வெற்றிலையைச் சப்பித்துப்பி வீட்டுக்கு வாக்க ளிக்க வேண்டும்.

சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி எமது இலக்குகளை அடைய நாம் தவறு வோமாயின், இதுவரை நாம் அனுபவித்த அவலங்களையும், வேதனைகளையும், இழப்புகளையும், தியாக வேள்வியில் ஆகுதியான இன்னுயிர்களையும் நாம் கொச்சைப்படுத்தியவர்களாவோம்.

எனவே, தம் சொந்த நலன்களுக்காகவும், வசதிவாய்ப்புகளுக்காகவும், தமிழ் இனத்தை பலிக்கடாவாக்க முற்பட்டுள்ள அபிவிருத்தி வேசம் போடும் அறிவிலிகளை விரட்டியடித்து தமிழினத்தை தலைநிமிர்ந்து வாழவைக்க முயலும் கொள்கைக்கு முன்னுரிமை கொடுத்து தமிழ்த் தேசியத்தை தமிழரின் நிலையான வாழ்வை உறுதிப்படுத்துவோம்.

எதிர்வரும் 21 ஆம் திகதி அதிகாலை சூரிய உதயத்துடன் காலை 7 மணிக்கு ஒவ்வொரு தமிழனும் தமிழ்த் தேசியத்தை மனத்தில் இருத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னமாக வீட்டுக்கு வாக்களியுங்கள். 22 ஆம் திகதி கட்டிய வேட்டியையும் கழற்றி விட்டு வடக்கிலிருந்து அரச தரப்பினரும் அடிவருடிகளும் ஓடி ஒளிவர். இது நிச்சயம்.

**தாயகத்திலிந்து புனிதன்**

## வட மாகாண சபைத் தேர்தல்




**மாவட்டம் - வவுனியா**
**உறுப்பினர்கள் - 06**
**வாக்காளர்கள் - 94,367**


**மாவட்டம் - முல்லைத்தீவு**
**உறுப்பினர்கள் - 05**
**வாக்காளர்கள் - 52,409**

**மாவட்டம் - யாழ்ப்பாணம்**
**உறுப்பினர்கள் - 16**
**வாக்காளர்கள் - 426,703**

**மாவட்டம் - கிளிநொச்சி**
**உறுப்பினர்கள் - 04**
**வாக்காளர்கள் - 68589**

**மாவட்டம் - மன்னார்**
**உறுப்பினர்கள் - 05**
**வாக்காளர்கள் - 72,420**



இந்தத் தேர்தலுக்காக 90 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றில் 59 வேட்புமனுக்கள் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளிடமிருந்தும், 31 வேட்பு மனுக்கள் சுயேச்சைக் குழுக்களிடமிருந்தும் தாக்கல் செய்யப்பட்டவையாகும். இதில் அரசியல் கட்சிகளின் இரண்டு வேட்பு மனுக்களும், சுயேச்சைக் குழுக்களின் மூன்று மனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

வட மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்தவால் 13.07.2013 அன்று தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதற்கமைய வட மாகாண சபைக்கு 36 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தலை எதிர்வரும் 21ஆம் திகதி நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இத் தேர்தலில் வாக்களிப்பதற்கு 714488 பேர் தகுதி பெற்றுள்ளனர். 25 வருடங்களின் பின்னர் வட மாகாணத்தில் நடைபெறும் முதலாவது தேர்தல் இதுவாகும்.

தேர்தல் அறிவிப்பு : ஜூலை 11
வேட்பு மனுத்தாக்கல் : ஜூலை 15-ஓகஸ்ட் 01 வரை
தபால் மூல வாக்களிப்பு: செப்டெம்பர் 9, 10
தேர்தல் : செப்டெம்பர் 21

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இரண்டாவது தவணைக்கான தேர்தல்

நாடுகடந்ததமிழீழஅரசாங்கத்தின்முதலாவது நாடாளுமனறம் தனது பணிகளை எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி நிறைவுசெய்வதுடன் அதற்கான தேர்தல், ஒக்ரோபர் மாதத்தில் 26 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இலங்கைத்தீவில் தமிழர்களின் அரசியல் உரிமைக்கான தேடல் முடக்கப்பட்ட நிலையில், நாடுகடந்த தமிழீழ அரசு என்ற எண்ணக்கரு உருவாக்கம் பெற்றது. விடுதலைப்புலிகளால் முன்னெடுக்கப்பட்ட 33 ஆண்டுகால ஆயுதப்போராட்டம் 2009 ஆம் ஆண்டில் மௌனிக்கப்பட்டபொழுது, தமிழர்களின் தனிநாட்டுக்கான விடுதலைப் போராட்டம் புதியமுனையில் நகர்த்தப்படவேண்டிய அவசியமேற்பட்டது.

அந்தவகையில் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்து சனநாயகமுறைப்படி தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் இணைந்து நாடுகடந்த தமிழீழ அரச நாடாளுமன்றத்தில் பங்குகொண்டார்கள். இப்புதிய கட்டமைப்பின் ஊடாக தமிழர்களின் தேசியஎழுச்சியை ஒருங்கிணைத்து தமிழீழத்தேசிய நடைமுறை அரசை இலங்கைத்தீவில் உருவாக்கும் நோக்குடன் தமது பணியை ஆரம்பித்தார்கள்.

தமிழர்களின் அடிப்படை அரசியல் கே-ாரி க்கைகளான தமிழர்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை ஏற்றுக்கொண்ட தீர்வை பெற்றுக்கொள்ளும் நோக்கிலான பல்வேறு செயற்பாடுகளை கடந்த 3 ஆண்டுகளில் முன்னெடுத்துவந்ததாக நாடு கடந்த தமிழீழ அரசின் அவுஸ்திரேலிய பிரதிநிதியும் துணைப்பிரதமருமான பேராசிரியர் செல்வநாதன் தெரிவிக்கின்றார்.

தமிழர்களின் அரசியல் வேட்கையான தமிழீழத் தனியரசிற்கான கோரிக்கையை சர்வதேச அளவில் சனநாயக முறைப்படி தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் ஊடாக முன்வைத்ததன் மூலம், தமிழீழ விடுதலைக்கான விடுதலைப்புலிகளின் போராட்டமானது, உண்மையில் அனைத்து தமிழ்மக்களாலும் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் என்பதை சர்வதேசங்களுக்கு உணரவைக்கப்பட்டதாக செல்வநாதன் மேலும் கூறுகின்றார்.

விடுதலைப்புலிகளின் கட்டமைப்பை தாயகத்தில் முடக்கியநிலையில், தொடர்ந்தும் தமிழீழ தனியரசிற்கான கட்டமைப்புக்கள் செயற்பட்டுவருவது சிறிலங்கா அரசிற்கு கலக்கத்தையே கொடுத்துவருகின்றது. சிங்கள தேசியத்தின் புத்திஜீவிகளாகவும் காவலர்களாகவும் காட்டிக்கொள்கின்றவர்கள் கூட நாடு கடந்த தமிழீழ அரசின் எண்ணக்கருவைக்கண்டு அச்சப்படுகின்ற



நிலைமை காணப்படுகின்றது.

தமிழீழத் தேசிய அட்டை, தமிழீழ சுதந்திர சாசன முரசறைவு என தமிழீழ தேசியசெயற்றிட்டங்களை முன்னெடுத்த அதே வேளை, ஜெனிவாவில் வைத்து 15க்கும் மேற்பட்ட நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து, சிறிலங்கா அரசின் அடக்குமுறைகளை ஆதாரங்களுடன் பகிரங்கப்படுத்தி வந்ததாக நாடுகடந்த தமிழீழ அரசின் வெளியுறவுத்துறை துணை அமைச்சராகப் பணியாற்றிய திரு. மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

தற்போதும் குறிப்பிட்டநாடுகளின் தூதுவர்களை சந்திக்கும்போது, நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகளாகவே சந்திப்புக்களை ஏற்படுத்தக்கூடிய சூழல் உள்ளதாகவும் அவர் மேலும் கூறுகின்றார்.

பலவேறு வாழ்வாதாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக வாழ்வாதாரங்களை இழந்த 200 விதவைக்குடும்பங்களுக்கு வாழ்வாதார திட்டஉதவி உரிய நிறுவனங்கள் ஊடாக தாயகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை புகலிடம் கோரி பல்வேறு நாடுகளுக்கு சென்ற தமிழர்களுக்கான சட்டஉதவிகளையும் ஏற்படுத்திக்கொடுப்பதில் நாடு கடந்த தமிழீழ அரசு கவனம் செலுத்தியுள்ளது. குறிப்பாக மலேசியா மற்றும் இந்தோனிசியாவில் சிக்கல்களை எதிர்கொண்ட தமிழர்களுக்கு இவ்வுதவிகள் கனடாவிலிருந்து சென்ற சட்டவாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை ஜெனிவாவுக்கு 07 தடவைகளும் தெற்கு சூடானுக்கு இரண்டு தடவைகளும் சென்றுள்ள மாணிக்கவாசகர், இம்மாத இறுதியில் மனிதவுரிமைகள் தொடர்பான முக்கிய மாநாட்டில் பங்குகொள்வதற்காக இலண்டன் செல்கின்றார். அனைத்து செலவுகளையும் தனது சொந்தப்பணத்திலிருந்தே செலவு செய்தே இவ்வளவு வேலைத்திட்டங்களையும் விடாமுயற்சியுடன், தனது பணிகளை மேற்கொண்டுவருகின்றார்.

முதலாவது நாடுகடந்த தமிழீழ அரச நாடாளுமன்றம் இதுவரை நான்கு முழுமையான அமர்வுகளை மேற்கொண்டுள்ளது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் கூடும் பிரதிநிதிகள் தமிழீழஅரசுக்கான வேலைத்திட்டங்களை முன்வைத்து விவாதித்து நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள்.

புதியகட்டமைப்புக்கான அவசியம் உணரப்பட்டபோதும், அனைத்து தமிழர்களும் இணைந்து செயற்படும்போது மட்டுமே எந்தக்கட்டமைப்பும் உறுதியாக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கமுடியும். அத்தோடுதமிழீழத்தனியரசேதமிழர்களுக்கான தீர்வுத்திட்டம் என்பதை உறுதியாக சொல்லக்கூடிய தமிழ்ச்செயற்பாட்டாளர்கள், நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகளாக முன்வரவேண்டும்.

ஆனால் அந்த இடைவெளி தொடர்ச்சியாக இருக்கின்றது. அவுஸ்திரேலியாவைப் பொறுத்தவரை எமது கொள்கை என்ன? தமிழீழத் தனியரசின் தேவை என்ன? என்பவற்றை வெளிப்படையாக முன்வைத்து அரசியல் செய்யக்கூடிய செயற்பாட்டாளர்கள் முன்வரவேண்டும் என்கிறார் விக்ரோரிய மாநில பிரதிநிதி டொமினிக்.

ஒக்ரோபர் மாதத்தில் நடைபெறவுள்ள இத்தேர்தலில் உண்மையான தமிழ்த்தேசியத்தில் அக்கறையுள்ள செயற்பாட்டாளர்கள் முன்வரவேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

## அவுஸ்திரேலியா வாழ் தமிழ் உறவுகளுக்கு தேர்தல் ஆணையம் விடுக்கும் வேண்டுகோள் !

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதலாம் தவணை அரசவை எதிர்வரும் ஒக்ரோபர் 1ம் திகதியுடன் தனது பணியினை நிறைவு செய்கின்ற நிலையில் இரண்டாம் தவணை அரசவைக்கான தேர்தல் பணிகள் புலம்பெயர் தேசங்களெங்கும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் அவுஸ்ரேலியா வாழ் தமிழ் மக்களுக்கான அறிவித்தல் ஒன்றினை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் தேர்தல் ஆணையம் விடுத்துள்ளது.

இந்த அறிவித்தலின் முழுவிபரம் :

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரத மர் திரு. விஸ்வநாதன் உருத்திரகுமாரன் அவர்கள், அக்டோபர் 01, 2013 அன்று நாடுகடந்த தமி ழீழ அரசாங்கத்தினது அர சவைதனது பணி யினை நி றைவு செய்வதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். அரசவை அக்டோபர் 1 ஆம் திகதி கலைக்கப்படுவதைத் தொடர்ந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இரண்டாம் தவணைக்குரிய தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி, சனிக்கிழமை, உலகளாவிய ரீதி யில் தமிழர் செறிவாக வாழும் நாடுகளில் நடைபெறவுள்ளது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இரண்டாவது அரசவைக்கான அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஒன்றை நாம் எதிர்நோக்கியுள்ளோம். தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் அனைத்து நாடுகளிலும் தொடங்கிவிட்டன. அந்த வகையில், அவுஸ்திரேலியாவிலும், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தேர்தலை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது. நடைபெறவிருக்கும் தேர்தலை சுதந்திரமாகவும், நீதியாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் நடாத்தி முடிப்பதற்கு உங்கள் ஒத்துழைப்பு இன்றியமையாதது. தேர்தல் ஆணையத்துடன் இணைந்து தொண்டர்களாகப் பணியாற்ற விரும்புகின்றவர்கள் 0437 332 240 இந்த தொலைபேசி மூலம் அறியத் தாருங்கள்.

அவுஸ்திரேலிய நாடு முழுவதும் பரந்து வாழும் தமிழ் மக்கள் அனைவரும், இத்தேர்தலில் பங்குகொண்டு, தமது வாக்குரிமையைப் பயன்படுத்தித், தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் செயற்றிட்டங்களுக்குத் தோள் கொடுத்துக் கடமையாற்றும் ஆர்வமும் தகுதயும் கொண்ட வேட்பாளர்களை இனம் கண்டு தெரிந்தெடுப்பதில் பங்கு கொண்டு உங்கள் வரலாற்றுக் கடமையைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

வாக்களிப்பு நிலையங்களுக்கான இட ஒழுங்கு, தொண்டர்கள் உள்ளிட்ட அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்வதில் நீங்கள் அனைவரும் எமக்கு உறுதுணையாக இருந்து உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். ஈழத்தமிழர் அல்லாதவர்களும் வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்ற வேண்டியிருப்பதால் அவர்கள் உதவியையும் பெற்றுத்தர நீங்கள் முன்வந்து உதவலாம். அவர்கள் முன்னிலையில் வாக்களிப்பு நடைபெறுவது தேர்தல் நிர்வாகத்திற்கு வலுச்சேர்ப்பதாக அமையும்.

அவுஸ்திரேலியாவிலிருந்து பத்து மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்படும் இத்தேர்தலில், வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்புபவர்கள், தேர்தல்ஆணையத்தினால்பரிந்துரைக்கப்பட்ட வேட்பாளர்களுக்கான தகைமைகள் அனைத்தையும் கொண்டிருக்கவேண்டும்.

மேற்கு, தெற்கு அவுஸ்திரேலியாவின் பரப்பளவும் மக்கள் தொகையும் பாரியவை. இவ்விரு பிரிவுகளையும் ஒரே அரசவை அங்கத்தவர் பிரிதிநிதித்துவப்படுத்துவது நடைமுறைச் சாத்தியமற்றதாகக் காணப்படுகிறது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தேர்தல் நடைமுறைக் கைநூல் விதிமுறைகளுக்கு இணங்க, அவுஸ்திரேலியாவின் மேற்கு, தெற்கு ஆகிய இரு பகுதிகளையும் தனித் தனியே ஒவ்வொரு அங்கத்துவ மாவட்டப் பிரிவுகளாகப் பிரிப்பதற்கு அவுஸ்திரேலியத் தேர்தல் ஆணையம் தீர்மானித்துள்ளது.

இம் முடிவிற்கிணங்க, 4 அரசவை அங்கத்தவர் தொகுதியான நியுசவுத்வேல்ஸ் தேர்தல் தொகுதி 3 அரசவை அங்கத்தவர் தொகுதியாக மாற்றி அமைக்கப்பட்டது. தெற்கு அவுஸ்திரேலியாவிற்கு வேட்பாளர் மனுக் கிடைக்கப்படாதவிடத்து அதே பிராந்தியத்திலிருந்து வேட்பாளர் மனு ஏற்றுக் கொள்ளப்படும்.

தேர்தல் தொடர்பான முக்கிய திகதிகள் கீழே பட்டியலிட்டுத் தரப்பட்டுள்ளன:

1. பாராளுமன்றம் கலைப்பு
   ஒக்டோபர் 01, 2013
2. வேட்பாளர் வேட்புமனு கோரப்படுவது
   ஒக்டோபர் 02, 2013
3. வேட்புமனு தாக்கல் செய்யும் இறுதி நாள்
   ஒக்டோபர் 08, 2013
4. வேட்பாளர் பட்டியல் வெளியாகும் நாள்
   ஒக்டோபர் 10, 2013
5. வேட்பாளர் மனு மீளப் பெறும் இறுதி நாள்
   ஒக்டோபர் 12, 2013
6. நா.க.த. அரசாங்கத்தின் பொதுத் தேர்தல்
   ஒக்டோபர் 26, 2013

இவ்வாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அவுஸ்ரேலிய பிராந்தியத்துக்கான தேர்தல் ஆணையாளரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் இணையம் - www.tgte-ec.com

# ஓயாத அலைகள் -2

# கிளிநொச்சி நகர் மீட்பு

கிளிநொச்சியானது தமிழர், சிங்களவர் தரப்பில் மட்டுமன்றி உலகிலும் உச்சரிக்கப்பட்டு வந்த ஒரு பெயர். தமிழர் தரப்பின் அரசியல், நிர்வாகத் தலைமையகமாகக் கருதப்பட்ட கிளிநொச்சி பன்னாட்டுச் சக்திகளால் அதிகம் கவனிக்கப்பட்ட ஒரு நகரமாகவும் இருந்து வந்தது.

*பின்னணி*

தொன்னூறுகளின் இறுதிப்பகுதியில் இருந்து கிளிநொச்சி இராணுவ ஆக்கிரமிப்பில்லாமல் இருந்தது. வடபகுதியின் முக்கிய வியாபாரத் தளமாக இந்நகரம் இருந்துவந்தது.

1995 இன் இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடந்த வலிகாம இடப்பெயர்வைத் தொடர்ந்து கிளிநொச்சியின் மக்கள் செறிவு அதிகரிக்கத் தொடங்கியது. 1996 இன் தொடக்கத்தில் யாழ்ப்பாணம் முற்றாக சிங்களப்படையினரிடம் வீழ்ந்தபோது கிளிநொச்சியின் சனச்செறிவு அதிகரித்திருந்தது. கிளிநொச்சி புதிதாகக் களைகட்டத் தொடங்கியது.

இந்நிலையில் யாழ்ப்பாண இடப்பெயர்வின்பின் மிகக்குறுகிய காலத்துள் வன்னியைத் துருத்திக்கொண்டிருந்த முல்லைத்தீவு முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். "ஓயாத அலைகள்" என்று பெயரிட்டு நடத்தப்பட்ட தாக்குதலில் அம்முகாம் முற்றாகக் கைப்பற்றப்பட்டதோடு முதன்முதலாக தமிழர்படைக்கு ஆட்லறிப் பீரங்கிகளும் கிடைத்தன. அம்முகாமைக் காக்க சற்றுத்தள்ளி தரையிறக்கப்பட்ட படையினரையும் தாக்கி தப்பியோட வைத்ததோடு முல்லைத்தீவு நகரம் தமிழர் வசமானது. அதன்பின்னர் முல்லைத்தீவு இழப்புக்குப் பதிலாக சிங்களப்படைகள் கைப்பற்றப் புறப்பட்ட நகரம் தான் கிளிநொச்சி.

யாழ்ப்பாண இடப்பெயர்வைத் தொடர்ந்து களைகட்டியிருந்த கிளிநொச்சிக்கு வந்தது ஆபத்து 'சத்ஜெய' என்ற வடிவில். 'சத்ஜெய -1' என்ற பேரில் பரந்தன் சந்தியைக் கைப்பற்றினர். அதன்பின் 'சத்ஜெய -2' என்ற பேரில் கிளிநொச்சி நோக்கி முன்னேறிய படையினருக்கு அது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. புலிகளின் கடுமையான எதிர்த்தாக்குதலைச் சந்திக்க வேண்டி வந்தது. புலிகளுக்கு அதுவொரு பயிற்சிக் களமாகக்கூட இருந்தது. பெருமெடுப்பில், யுத்த டாங்கிகளின் துணையோடு முன்னேறும் படையினரை எதிர்கொள்வது தொடர்பான ஆற்றலை மெருகூட்டும் நடவடிக்கை அது. தமது பீரங்கியணிகளையும், பீரங்கிச்கூட்டு வலுவையும் அக்களத்தில் மேம்படுத்திக் கொண்டார்கள் புலிகள். பின்வந்த 'ஜெயசிக்குறு' எதிர்ப்புக்கு இச்சமரிலிருந்து பயின்றவையே உதவின.

சுமார் ஒருமாதகாலம் இழுத்தடித்த சத்ஜெய -2 நடவடிக்கை, பின் 'சத்ஜெய -3' என்ற நிலைக்கு வந்தது. இறுதியாக கிளிநொச்சி சிங்களப் படைகளிடம் வீழ்ந்தது. ஒருவர்கூட அந்நகரில் இல்லாமல் அத்தனைபேரும் வன்னியின் ஏனைய பக்கங்களுக்கு இடம்பெயர்ந்திருந்தனர்.

கிளிநொச்சியைக் கைப்பற்றவென சிங்களப் படைகள் கொடுத்த இன்னொரு விலை பூநகரி. பூநகரிப் படைத்தளத்தில் இருந்து முற்றாக வெளியேறிச் சென்றது சிங்களப்படை.

இடம்பெயர்ந்த மக்கள் அவ்வப்போது தம் வீடுகளைப் பார்த்துவரவென கிளிநொச்சிக்குச் செல்வார்கள். சூனியப்பிரதேசம் என அவர்கள் நினைத்த இடங்களுக்குச் சென்றவர்கள் திரும்பி வரவில்லை. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சிங்களப் படையால் கொல்லப்பட்டார்கள்.

இந்நிலையில் வன்னியை ஊடறுத்து யாழ்ப்பாணத்துக்குப் பாதையமைக்க 'ஜெயசிக்குறு' என்ற பேரில் இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டது. அவர்களது இலக்கு வவுனியா தாண்டிக்குளத்தில் இருந்து கிளிநொச்சி வரை செல்வதுதான். அந்நடவடிக்கை வன்னியை முழுப்போர்க்களமாக்கியது. சிறிதுசிறிதாக முன்னேறி வந்த படைகள் வன்னியின் கணிசமான பகுதியைக் கைப்பற்றியிருந்தன. ஒருகட்டத்துக்கு மேல் முன்னேற முடியாதபோது வேறு முனைகளில் சமர் முனையைத் தொடக்கி இடங்களைப் பிடிக்க முற்பட்டார்கள். இறுதியாக மாங்குளம்வரை வந்தவர்கள், மாங்குளம் சந்தியைக் கைப்பற்ற முடியாமல் திண்டாடி நின்றார்கள்.

1998இல் இலங்கைச் சுதந்திர தினமான பெப்ரவரி நாலாம் நாள் கிளிநொச்சியிலிருந்து கண்டிக்கு பேருந்து விடுவதாக அப்போதைய பாதுகாப்புப் பிரதியமைச்சர் ரத்வத்த சூளுரைத்திருந்தார். அதேநாளில் கிளிநொச்சியைக் கைப்பற்றவென புலிகள் தாக்குதல் தொடுத்தனர். அத்தாக்குதல் திட்டமிட்டபடி வெற்றியடையவில்லை. சில பகுதிகளை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. கைப்பற்றிய வேறு சில பகுதிகளை விட்டுப் பின்வாங்க வேண்டிவந்தது.



களங்கள் - 1

கணிசமான இழப்புடன் அத்தாக்குதல் திட்டம் நிறுத்தப் பட்டது.

அதன்பின் இராணுவத் தினரின் தொடர்ச்சியான முன்னேற்றங்கள் பல நடந்தன. கிளிநொச்சியிலிருந்து கண்டிவீதி வழியாக தெற்கு நோக்கியும் பாரிய முன்னேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அனைத்தும் புலிகளால் முறியடிக்கப்பட்டன.

இந்நிலையில் கிளிநொச்சியை தமிழர் தரப்பு மீட்கும்நாள் வந்தது.

*கிளிநொச்சி மீட்பு*

1998 செப்ரெம்பர் மாதம், 26 ஆம் நாள். தியாகி திலீபனின் பதினோராவது ஆண்டு நினைவுநாள். அவரின் நினைவுநாள் வன்னியில் நினைவுகூரப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில் புலிகளின் அணிகள் தாக்குதலுக்குத் தயாராகின்றன. 26 ஆம் நாளின் இரவில் தாக்குதல் அணிகள் இலக்குநோக்கி நகர்கின்றன. அன்றைய நள்ளிரவு தாண்டி 27 ஆம் நாள் அதிகாலை சமர் வெடிக்கின்றது. கிளிநொச்சி நகரை எதிரியிடமிருந்து மீட்பதற்கான சமர் "ஓயாத அலைகள் -2" என்று பெயரிடப்பட்டு நடத்தப்பட்டது.

3 நாட்கள் நடந்த கடும் சண்டையின்பின் கிளிநொச்சி நகரம் முற்றாகப் புலிகளிடம் வீந்தது. 1200 க்கும் மேற்பட்ட படையினர் கொல்ப்பட்டனர். கையளிக்கப்பட்ட இராணுவத்தினரது சடலங்களில் 600 சடலங்களை மாத்திரம் அரசதரப்புப் பெற்றுக்கொண்டது. மிகுதியை வழமைபோல் மறுத்துவிட்டது.

கைப்பற்றப்பட்ட கிளிநொச்சி நகரம் முழுவதுமே உயர் வலுவான பாதுகாப்பு முன்னரங்கப் பகுதிகளையும் பதினைந்துக்கும் மேற்பட்ட முகாம்களையும் ஒரு பிரிகேட் தலைமையகத்தையும் கொண்டிருந்தது. இதன் வெளிப்புற முன்னரங்கப்பகுதி பதினைந்து 15 கிலோமீற்றர் நீளம்கொண்ட வலுவான காவலரண் வரிசையைக் கொண்டிருந்தது. முல்லைத்தீவுப் படைத்தளம் 5 கிலோமீற்றர் சுற்றளவைக் கொண்ட படைத்தளம் என்பதை விளங்கிக் கொண்டால் கிளிநொச்சிப் படைத்தளத்தின் பிரமாண்டம் புரியும்.

ஆனையிறவையும் கிளிநொச்சிப் படைத்தளத்தையும் ஊடறுத்து பரந்தனில் நிலைகொண்டிருந்த புலியணியைத் தாண்டி கிளிநொச்சியில் எஞ்சியிருந்த சிங்களப்படைகள் ஓட்டம் பிடித்தன. ஆடுமாடுகள் பட்டிவிட்டு ஓடுவது போல் நூற்றுக்கணக்கில் கும்பலாக ஓடித்தப்பிய படையினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் ஏராளமான படையினர் கொல்லப்பட்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் சில வீரவரலாறுகள் புலிகளால் எழுதப்பட்டன.

புலிகளின் மகளிர் படையணியொன்றின் தளபதியாக களத்தில் நின்ற லெப்.கேணல் செல்வி, எறிகணைகளை எதிரிகளுக்கிடையில் வீழ்த்த ஆள்கூறுகளையும் திருத்தங்களையும் பீரங்கிப்டையணிக்கு அறிவித்துக்கொண்டிருந்தார். அதில் கொல்லப்பட்டவர்கள் போக மிகுதி இராணுவத்தினர் செல்வியையும் தாண்டி ஆனையிறவு நோக்கி ஓடிக் கொண்டிருந்தனர். துப்பாக்கியால் சண்டைபிடிக்க முடியாதளவுக்கு கொத்துக் கொத்தாக இராணுவத்தினர் ஓடிக் கொண்டிருந்த நேரத்தில் செல்வியின் பீரங்கிப்படைக்கான அறிவுறுத்தல் இப்படியாக இருந்தது.



"என்னைச்சுத்தி ஆமிதான் நிக்கி றான். என்னால இனி ஒண்டும் செய்ய ஏலாது. என்னைப் பற்றிக் கவலைப்படாமல் நான் நிக்கிற இடத்துக்கு செறிவா குத்துங்கோ...."

அச்சமரில் லெப்.கேணல் செல்வி வீரச்சாவடைந்திருந்தார்.

இதே போன்றதொரு சம்பவம் மீண்டும் 11.08.2006 அன்று யாழ்ப்பாணம் மீது புலிகளால் நடத்தப்பட்ட சமரிலும் நடந்தது.

ஓயாத அலைகள் -2 சமரில் நிறைய பீரங்கிகள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகளின் பீரங்கிப்படையணி வளர்ச்சிக்கு முக்கியமான பாய்ச்சலாக அது இருந்தது.

புலிகள் கிளிநொச்சியைக் கைப்பற்றியபோது படையினர் மாங்குளம் சந்தியைக் கைப்பற்றினர். ஆனால் ஏற்கனவே பலதடவைகள் அச்சந்தியைத் தாம் கைப்பற்றியதாக இராணுவம் அறிவித்திருந்ததால் அவ்வெற்றி பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

HEAVENLY FEAST MINISTRIES
MELBOURNE

HEALING & MIRACLE CRUSADE

கடவுளின் சக்தியில் உள்நுழைதல்

"And these signs shall follow them that believe; In My Name they shall cast out devils; they shall speak with new tongues; They shall take up serpents; and if they drink any deadly poison, it shall not hurt them; they shall lay hands on the sick, and they shall recover."
Mark 16:17-18



வாருங்கள்
கிறிஸ்துவால எப்படி
வாழ்வு பெறுகின்றீர்கள்
என பாருங்கள்

Dr. Matthew Kuruvilla
(Tangu Brother)

VENUE
Plenty Valley Church
9 Danaher Drive, South Morang,
Victoria, Australia.

DATE & TIME
Friday 27th & Saturday 28th
of September at 6:30 pm

FOR MORE INFORMATION PLEASE CONTACT HEAVENLY FEAST MINISTRIES MELBOURNE. Bro. Cherian Peter - 04 03550038
email:aus.heavenlyfeast@hotmail.com

RALLY TO LET REFUGEES IN

Seeking asylum is a human right



SAT - 21 SEPTEMBER 2013
1PM, STATE LIBRARY


- Stop the PNG Deal - no offshore processing
- Permanent residency not TPV's
- Welcome refugees - Don't turn back boats
- End mandatory detention - Stop deportations

Refugee Action Collective (Vic)
www.rac-vic.org

Whoever wins the election, we need to fight the racist race to the bottom on refugee policy.
For more info contact the Refugee Action Collective - Chris 0403 013 183 or Liz 0405 736 265 | rac-vic.org
Authorised by A. Zivcic for the Refugee Action Collective, Lvl 5, 407 Swanston St, Melb 3000. Printed at Officeworks 121 Bell St, Preston VIC 3072

# TAMIL RADIOs and TV in AUSTRALIA

| சேவை | Station | METRE/CHANNEL | BROADCASTING TIME | | CITY | ALSO THROUGH |
|---|---|---|---|---|---|---|
| | | | DAY | TIME | | |
| SBS தமிழ் வானொலி | SBS | FM 97.7 Sydney | SUNDAY | Differ to each city | All Cities | ATBC & Inpathamil Oli |
| தமிழ் முழக்கம் (Tamil Mullkam) | Radio 2000 | FM 98.5 | SATURDAY | 8.00-10.00 PM | Sydney | ATBC |
| முத்தமிழ் வானொலி (Muthamil Malai) | 2CCR | FM 90.5 | SUNDAY | 6.30-8.00 PM | Sydney | Inpaththamil Oli |
| இன்பமான இரவினிலே | SWR | FM 99.9 | FRIDAY | 10.00-12.00 AM | Sydney | ATBC |
| உதய கீதம் (Uthaya Keetham) | SWR | FM 99.9 | FRIDAY | 12.00-02.00 PM | Sydney | ATBC |
| இன்பத்தமிழ் ஒலி (Inpatamil Oli | Inpatamil | SPECIAL METRE | | 7 DAYS 24 Hours | 3 Cities | Also NZ thru Optus |
| AUS Tamil Broadcasting Co-op | ATVC | SPECIAL METRE | | 7 DAYS 24 Hours | 3 Cities | Also NZ thru Optus |
| தமிழ்க் குரல் (Tamil Kural) | 3CR | AM 855 | MONDAY | 6.30-8.00 PM | Melbourne | Inpaththamil Oli |
| நிதர்சனம் (Manifest) | 3CR | AM 855 | SATURDAY | 12.00-12.30 PM | Melbourne | Inpaththamil Oli |
| தமிழ் ஓசை (Tamil Osai) | 3ZZZ | FM 92.3 | THURSDAY | 8.00-9.00 PM | Melbourne | Inpaththamil Oli |
| சங்கநாதம் (Sanganatham) | Voice Of Dan | FM 97.1 | SUNDAY | 8.00-10.00 PM | Melbourne | ATBC |
| வானிசை (Vaanisai) | | FM 88.9 | FRIDAY | 6.00-8.00 PM | Melbourne | ATBC |
| வானமுதம் (Vaanamutham) | | FM 88.6 | TUESDAY | 6.00-8.00PM | Melbourne | Inpaththamil Oli |
| தமிழ் ஒலி (Tamil Oli) | 4EB | FM 98.1 | SUNDAY | 9.00-10.00 PM | Brisbane | |
| தமிழ் ஒலி (Tamil Oli) | 4EB | FM 98.1 | FRIDAY | 5.00-6.00 PM | Brisbane | |
| கன்பரா தமிழ் வானொலி | CMS | FM 91.1 | THURSDAY | 8.00-9.00 PM | Canberra | |
| கன்பரா தமிழ் வானொலி | CMS | FM 91.1 | SATURDAY | 11.00-12.00 Noon | Canberra | |
| கன்பரா தமிழ் வானொலி (இளைஞர்) | CMS | FM 91.1 | SUNDAY | 11.00-12.00 Noon | Canberra | |
| தமிழ் ஒலி (Tamil Oli) | 6EBA | FM 95.3 | MONDAY | 7.30-8.00 PM | Perth | |
| தமிழ்ச் சோலை (Tamil Solai) | 6EBA | FM 95.3 | FRIDAY | 10.30-12.00 PM | Perth | |
| தமிழ்ச் சங்க வானொலி | Top FM | FM 104.1 | SATURDAY | 8.00-9.00 PM | Darwin | |
| தமிழ்ச் சங்க வானொலி | Top FM | FM 104.1 | MONDAY | 7.00-8.00 PM | Darwin | |
| GTV | Optus Channal | SPECIAL CHANNEL | 7 DAYS | 24 Hours | All Cities | Also in NZ |



# ‘Apple’ கணினிப்பொறி உலகின் முடி சூடா மன்னன் Steve Jobs

“நான் ஒரு நல்ல தகப்பனாகவே என் குழந்தைகளுக்கு இருக்க விரும்புகிறேன். என் தந்தையிடமிருந்து நான் எதைக் கற்றுக்கொண்டேனோ அதை என் குழந்தைகளுக்குக் கொடுப்பேன். மிக முக்கியமாக அன்பை.” ஊடகவிலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அப்பிள் நிறுவன உரிமையாளர் ஜாப்ஸ் சொன்ன பதில்தான் இது. உங்கள் தந்தையர் யார் என யாராவது கேட்டால் “என்ன சந்தேகம் ஜாப்ஸ்சும், கிளாராவும்தான் என் பெற்றோர்’ என எப்போதும் சொல்லி வந்தார்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் ஸ்டீவ் ஜாப்ஸ் பிறந்த போது உடனடியாக அக்குழந்தை தத்துக் கொடுக்கப்பட்டது. அதை ஜாப்ஸ், கிளாரா தம்பதிகள் தத்தெடுத்துக் கொண்டனர். ஜாப்ஸ் லேசர் கம்பெனி ஒன்றின் தொழிலாளி, இயந்திரங்களைக் கையாளும் வித்தையை ஸ்டீவ் ஜாப்ஸுக்கு கற்றுக் கொடுத்தவர். மின்னணுப் பெருட்கள் மீதான ஆர்வமும் புதிய பொருட்களை உருவாக்கும் வேகமும் ஜாப்ஸிற்கு உருவானது இப்படித்தான்.

ஸ்டீவ் ஜாப்சைப் பெற்ற உண்மையான பெற்றோரின் பெயர் ஜென்டாலி , ஜோன் கரோல் ஸ்டீபெல். ஜாப்ஸைப் பெற்ற ஜென்டாலி சிரிய நாட்டிலிருந்து வந்த முஸ்லீம் வம்சாவழி. தாயான ஜோன் கரோல் ஸ்டீபெல்லோ ஜெர்மானிய வம்சாவழியைச் சேர்ந்தவர், பின்னர் அமெரிக்கக் குடியுரிமை பெற்றவர். 1955ல் திருமணத்திற்கு முன்பே பிறந்த குழந்தையை தத்துக் கொடுத்து விட்டு பத்து மாதம் கழித்து இருவரும் திருமணம் செய்து கொண்டனர். திருமணமான இரண்டாவது வருடத்தில் 1957 ல் அந்த தம்பதிக்கு இன்னொரு குழந்தை பிறந்தது அதற்கு மோனா சிம்ஸ்சன் என்று பெயர் வைத்தனர்.

ஜென்டாலி, ஜோன் கரோல் உறவு பத்தாண்டு காலம் கூட நீடிக்கவில்லை. அந்த திருமண உறவு இருவருக்குமே கசந்து விட இருவரும் விவாகரத்துப் பெற்று பிரிந்து விடுகின்றனர். தாயின் அரவணைப்பில் வளர்ந்த மோனா சிம்ஸ்சன் பின்நாட்களில் ஒரு நாவலிஸ்டாக அறியப்படுகிறார். ஆனால் மோனா சிம்சனுக்கு அண்ணனாகப் பிறந்து பிறந்தவுடன் தத்துக் கொடுக்கப்பட்டு விட்ட துரதிருஷ்டமான முதல் குழந்தைக்கு பெற்றோரின் அன்பு கடைசி வரை கிடைக்கவில்லை. சபிக்கப்பட்ட குழந்தையாக அவர்கள் தத்துக் கொடுத்த ஸ்டீவ் ஜாப்ஸ்தான் கணிப்பொறி உலகில் முடி சூடா மன்னனாக விளங்கினார். அவரது மரணத்தின் பின்னர் கூட அவரது கணிப்பொறி கண்டுபிடிப்புகள் காலத்தால் அழியாத புகழை அவருக்குக் கொடுத்துச் சென்றிருக்கிறது.

குழந்தை ஜாப்சை தத்தெடுத்து வளர்த்த பெற்றோர் ஜாப்ஸ்சும், கிளாராவும்தான் அவருக்கு ஆரம்பக் கல்வியை செம்மையாகக் கொடுத்தனர். அன்பினால் வளர்தெடுக்கப்பட்ட சிறுவன் தன்னை வளர்த்த தந்தையின் பெயரையே தன் பெயராக்கி மின்னணு உலகை ஆட்சி செய்த கதை சுவராஸ்யமானது. அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள கியூபர்டினோ நடுநிலைப்பள்ளியிலும், ஹோம்ஸ்டெட் மேல் நிலை பள்ளியிலும் இளமைக் கல்வியை பயின்றார் ஜாப்ஸ். காலிபோர்னியாவின் ஹியூட்டெட் பக்கார்ட் கம்பெனியில் தொழிற் கல்வி உரையை கவனமாகக் கேட்டான் மாணவன் ஜாப்ஸ். கோடைக்காலங்களில் தொழிற்சாலைகளில் பணிபுரிந்த ஜாப்ஸ். மேல் நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்ற பின்னர் 1972 இல் மேற்படிப்பிற்காக கல்லூரியில் சேர்ந்தார். கல்லூரியின் ஒரு பருவக் கல்வி (முதல் செமஸ்டர்) முடிந்த நிலையில் அவரால் கல்லூரிப் படிப்பை தொடர முடியவில்லை. வளர்த்த பெற்றோர் அன்பானவர்களாக இருந்தாலும் அவர்கள் ஏழைகள். நண்பர்களோடு சேர்ந்து தீர்ந்து போன குளிபான பாட்டில்களை பொறுக்கி விற்று உண்ட நாட்களும் உண்டு. தான் ஓர் அநாதை என்ற உணர்வும் ஏழ்மையும் ஜாப்சின் மனதில் ஆறாத காயங்களை உருவாக்கியது. அதுவே தான் பின்னாட்களில் பெறப்போகும் வெற்றிக்கு உரமாகியது.

தொடர்ந்து கல்வி பயில முடியா வறுமைச் சூழலில் ஜாப்ஸ் 1974ஆம் ஆண்டு மின்னணு விளையாட்டு நிறுவனத்தில் பணிக்குச் சேர்ந்தார். ஜாப்சிற்கு இளமையிலேயே ஆன்மீகத் தேடலும் இருந்தது. தென் கிழக்காசிய ஆன்மீக மரபுகளில் அதிக நாட்டம் கொண்டிருந்த ஜாப்ஸ் தன் நண்பன் டானியல் காட்கேவுடன் ஆன்மீகப் பயணமாக இந்தியா வந்தார். சில நாட்கள் காஞ்சி மடத்தில் தங்கியிருந்த ஜாப்ஸ் பின்னர் புத்த மதத்தை பற்றி அறிந்து அந்த தாக்கத்தில் தன் தலையை மொட்டையடித்துக் கொண்டு அமெரிக்காவுக்குக்




திரும்பியதாக ஒரு தகவல் சொல்கிறது. ஆழமான ரசனையும் மாறிவரும் ரசனையையும் எளிதாகப் புரிந்து கொள்ளும் ஸ்டீப் ஜாப்ஸ் ஒரு புதுமை விரும்பி ஆனாலும் ஸ்டீவ் ஜாப்ஸ் ஒரு தொழில்நுட்ப வல்லுநரோ, மேதையோ கிடையாது. ஆனால் எதை யாரை வைத்து எப்படிச் செய்தால் அது வெற்றி பெறும் என்கிற வித்தையை கற்று வைத்திருந்தார். அதுதான் அவரை வந்த வேகத்தில் வெற்றியின் சிகரத்தில் அமர வைத்தது.

### ஆப்பிள் நிறுவனம்

கடவுளால் விலக்கப்பட்ட மரத்திலிருந்து ஆப்பிளை உண்ண ஏவாள் ஆசைப்பட்டதிலிருந்து மனிதனின் ஆசையும் தேடலும் துவங்குகிறது. வாழ்க்கை முழுக்க ஒரு மனிதனின் வேட்கைதான் அவனை நகர்த்திச் செல்கிறது. அந்த வேட்கைதான் போட்டி உலகின் ஒருவனை உச்சத்திற்குக் கொண்டு வருகிறது. 1976 இல் ஸ்டீவ் ஜாப்ஸ், வாஸ்நியாக், ரொனால்ட் என்ற தன் நண்பர்களுடன் சேர்ந்து ஒரு கணிப்பொறி நிறுவனத்தை துவங்குகிறார். அதற்கு அவர் வைத்த பெயர் அப்பிள். இந்த நிறுவனத்தைத் துவங்க நிதி உதவி செய்தது இன்டெல் நிறுவனத்தில் பொறியாளராக இருந்த மைக் மார்குலா. தன் நண்பர்களை விட வயதில் சிறியவனான அந்த சிறுவன் இப்போது ஒரு சிறிய அப்பிள் நிறுவனத்தில் ஒரு உரிமையாளர்களுள் ஒருவர் . அப்போது ஸ்டீவ் ஜாப்ஸ் என்னும் அந்த சிறுவனுக்கு வயது வெறும் 16 தான்.

அப்பிள் கொஞ்சம் பிரபலமான பின்னர் நிறுவனத்திற்கு 1978 இல் மைக் ஸ்காட் என்பவரை தலைமைச் செயல் அதிகாரியாக (சி.இ.ஓ) நியமித்தனர். ஜாப்சுக்கு ஜான் ஸ்கெல்லி என்பவரைத் தெரியும். திறமையான அந்த மனிதர் பெப்சி குளிர்பான நிறுவனத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். அவரைச் சந்தித்த ஜாப்ஸ் “வெறும் சர்க்கரைத் தண்ணீரை விற்று இப்படியே உன் வாழ்க்கையைக் கழிக்க விரும்புகிறாயா? அல்லது என்னுடன் வந்து உலகத்தை ஆள விரும்புகிறாயா? ” என்று கேட்க ஜாண் ஸ்கல்லியும் ஜாப்சோடு இணைந்து கொண்டார். நண்பர்களோடு புதிய உத்திகளை கவர்ச்சிகரமாக தயாரிப்பதில் மோதலும் வந்தது. அப்பிள் நிறுவனத்தின் தலைவராக இருந்த மைக் மார்க்குளா தன் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். அவரைப் பொறுத்தவரை ஸ்டீவ் ஜாப்ஸ் ஒரு ஒழுக்கமற்ற மனிதர். இவரால் ஆப்பிள் பெரிய பின்னடைவைச் சந்திக்கும் என்ற காரணத்தைச் சொல்லி மைக் விலகிக் கொண்டார்.

1980 களில் கிராபிக்ஸ் உலகில் புதிய மறுமலர்ச்சியை உருவாக்கியது ஜாப்சின் கண்டு பிடிப்புகள். மாக்கின் டாஷ் என்னும் புதிய கணிப்பொறி தொழில்நுட்பத்தை உருவாக்கினார். அன்றைய சூழலில் அதுதான் உலகின் அதிக தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட சிறிய கணிப்பொறி. ஒரு தயாரிப்பு மக்களிடம் பிரபலமாவதற்கு முன்பே அடுத்தடுத்த தொழில் நுட்பங்களை ஜாப்ஸ் உருவாக்கி வெளியிட்டது தொழிலாளர்களிடையேயும் நண்பர்களிடையேயும் சச்சரவுகளை உருவாக்கியது. ஒரு பக்கம் கணிப்பொறி தொழில்நுட்பங்களை உருவாக்கிய ஜாப்ச் அப்பிள் தொலைக்காட்சியையும் துவங்கினார். ஊழியர்களின் விலகல் நண்பர்களிடையே உருவான கருத்து முரண்கள் அப்பிள் நிறுவனத்திற்கு மிகப்பெரிய சரிவைக் கொடுத்தது. விற்பனையில் மிகப்பெரிய வீழ்ச்சியை சந்தித்த காலம் அது. அப்பிள் நிறுவனத்திற்குள் ஜாப்சுக்கு எழுந்த எதிர்ப்பின் விளைவாய் அவர் அங்கிருந்து ராஜினாமா செய்ய நேரிட்டது.

1984இல் அவர் ஆப்பிள் நிறுவனத்திலிருந்து வெளியேறிய வேகத்தில் அடுத்த தலைமுறையை குறி வைத்து நெக்ஸ்ட் என்னும் கணிப்பொறியை கண்டுபிடித்தார். பிரமாண்ட திரையுடன், எல்லா வசதிகளும் கொண்ட அந்த கணிப்பொறி இன்றைக்கு நாம் பயன்படுத்தும் கணிப்பொறியை விட எளிதானது. மவுஸ், சிபிஒ என தனித்தனியாக இல்லாமல் நெக்ஸ்ட் கணிப்பொறியில் எல்லாம் ஒன்றாக இருந்தது. கணிப்பொறி தயாரிக்க ஆனச் செலவோடு ஒப்பிட்டு அதை விற்பனை செய்ய முனைந்த போது அது தன் சக்திக்கு மீறியதாகப் பட தனக்கு நிதி உதவி செய்யுமாறு அறிவித்தார் ஜாப்ஸ். இவரது விளம்பரத்தைக் கண்ட கோடீஸ்வரர் ராஸ் பெரோட் என்பவர் பணத்தை முதலிட ஒரு கணிப்பொறியை வெளியிட்டார். கல்வி பயிலும் மாணவர்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக இருந்த நெக்ஸ்ட் உண்மையில் வெற்றி பெறவில்லை. காரணம் அது அதிக வசதியோடு இருந்தாலும் எல்லோரும் வாங்கக்கூடிய விலையில் இருக்கவில்லை.

மீண்டும் 1990 இல் இரண்டாம் தலைமுறை நெக்ஸ்ட் கணினியை அறிமுகம் செய்தார். உள்ளங்கைக்குள் உலகம் என்ற சொல் அறிமுகமாகி கணிப்பொறி மூலம் இணையப்பயன்பாடுகளின் எல்லா சாத்தியங்களையும் உருவாக்கிக் கொடுத்தார் ஜாப்ஸ். சாட்டிங், வாய்ஸ் மெயிலிங், வீடீயோ சாட்டிங், மெயில் பரிமாற்றம், என தகவல் தொழில் நுட்பத்தில் ஜாப்ஸ் செய்தது மிகப்பெரிய கிளர்ச்சி. அன்றைக்கு கம்யூட்டர் ஜாம்பவான்கள் என்று உலகம் கொண்டாடிய பெரிய மனிதர்களே ஜாப்சின் வியத்தகு சாதனைகளைக் கண்டு அசந்து போயினர். பொருளின் தயாரிப்பு

14→

# Apple...

(13ஆம் பக்கத் தொடர்)

மட்டுமல்ல விற்பனை செய்யவும் தெரிய வேண்டும் என்பதை புரிந்து கொண்ட ஸ்டீவ் ஜாப்ஸ். இன்டெல் நிறுவனத்துடன் இணைந்து சந்தைக்கு வந்தார். வந்த வேகத்தில் அவர்கள் 1.03 மில்லியன் டாலர்களை அள்ளிக் குவித்து லாபம் கண்டனர். அடுத்தக் கட்டமாக நெக்ஸ்ட் மென் பொருள் வலைத் தளத்தையும் அறிமுகம் செய்தார் ஸ்டீவ் ஜாப்ஸ்.

### *கிராபிக்ஸ் உலகில் ஸ்டீவ் ஜாப்ஸ்*

தொடக்க காலமான 1986 இல் புகழ்பெற்ற கிராபிக்ஸ் பட நிறு வனமான பிக்ஸாரில் ஓர் உயர்நிலைத் தயாரிப்பாளராக வேலைக்குச் சேர்ந்தார். பிக்ஸார் நிறுவனத்தின் தயாரிப்புகள் எதிர்ப்பார்த்த லாபத்தைக் கொடுக்காமல் பெரும் நட்டத்தை உருவாக்க பிக்ஸார் டிஸ்னி குழுமத்தோடு இணைந்து படங்களை தயாரிக்கவும் உலகெங்கும் விநியோகிக்கவும் தீர்மானித்தது. முதன் முதலாக இவர்கள் கூட்டணியில் வெளியான திரைப்படம் டாய் ஸ்டோரி உலங்கெங்கும் குழந்தைகள் உலகில் பெரும் வெற்றியைப் பெற்ற இந்தப் படத்தை தலைமை பொறுப்பாளராக இருந்து வெளியிட்டது ஸ்டீவ் ஜாப்ஸ்தான். விழுந்து கொண்டிருந்த பிக்ஸார் நிமிர்ந்து அமர்ந்தது. அடுத்தடுத்து படங்களை ஸ்டீவ் ஜாப்சின் மேற்பார்வையில் இரு நிறுவனங்களும் வெளியிட அவர்கள் கிராபிக்ஸ் உலகத்திலும் கோலோச்சத் துவங்கினார் ஸ்டீவ் ஜாப்ஸ்.

தொடர்ந்து வெற்றிப்படங்களை இக்குழுமம் அளித்து வந்ததோடல்லாமல் இவற்றில் சில ஒஸ்கார் விருதுகளையும் வென்றன. இந்த வெற்றிகள் அனைத்தும் ஜாப்ஸை செல்லவந்தனாக ஆக்கியது டிஸ்னி மற்றும் பிக்ஸார் நிறுவனங்களுக்கு வரும் பங்குகளில் 7% பங்குதாரராக ஜாப்ஸ் திகழ்ந்தார்.

திரைத்துறையில் காலடி எடுத்து வைத்த ஸ்டீவ் ஜாப்சின் நெக்ஸ்ட் தயாரிப்பை 1996 இல் அப்பிள் நிறுவனம் $429 மில்லியன் டாலருக்கு வாங்கிக்கொள்வதாக பேரம் பேசியது. அது போல நெக்ஸ்ட் நிறுவனத்தை ஆப்பிளோடு இணைத்து விட்டு மீண்டும் ஆப்பிள் நிறுவனத்தில் இணைந்தார் ஸ்டீவ் ஜாப்ஸ். அப்போது தலைமை செயல் அதிகாரியாக இருந்த கில் அமீலியோ என்பரை வெளியேற்றி விட்டு அப்பிள் தலைமைச் செயல் அதிகாரியாக பொறுப்பேற்க ஜாப்சை அழைத்து அமர வைத்துக் கொண்டது.

நிறுவனத்தை எப்படி லாபமாக்குவது என்பதற்காக அவர் தயாரிப்புகளோடு போரடினார். அவரது சில கண்டுபிடிப்புகளான நியுட்டன், சைபர் டாக், போன்றவை படு தோல்வியடைய இன்றைக்கு உலகில் தரமான கணிப்பொறி என்று புகழப்படும் அப்பிள் மாக் கணிப்பொறியை உருவாக்கி வெளியிட்டார். இன்று வரை ஸ்டீவ் ஜாப்சின் அந்த தயாரிப்பை வெல்ல இன்னொரு கணிப்பொறி கண்டுபிடிக்கப்படவில்லை.சடுதியாக முன்னேறிய ஆப்பிள் கணிப்பொறி உலகில் கவர்ச்சிகரமான ஒன்றாக இளைஞர்களை கவர்ந்திழுத்தது.

கணிப்பொறியை அடுத்து சிறிய கையடக்க சிறிய ஐ பேட், ஐ டியூன்ஸ், டிஜிட்டல் தொடு திரைகளைக் கொண்ட சிறிய பொருட்கள் அடுத்தடுத்து வெற்றியடைந்தது. 2007 ஆம் ஆண்டு ஜூன் 29 ஆம் நாள் அப்பிள் நிறுவனம் தனது முதல் அலை பேசியை வெளியிட்டது. அது அனைவரின் எதிர்பார்ப்பையும் மீறிய சிறப்பம்சங்கள் நிறைந்த அலைபேசியாக. தொடு திரை வடிவில் இருக்க அது அதிக வரவேற்பைப் பெற்றது.


### *ஸ்டீவ் ஜாப்ஸ் எதிர்ப்பும் ஆதரவும்*

ஜாப்சின் எல்லைகள் மின்னணு உலகில் எல்லைகளை விரித்துச் செல்லச் செல்ல அவருக்கு எதிர்ப்பும் உருவானது. மின்னணுக் கழிவுப் பொருட்களை மறு சுழற்சி அடிப்படையில் செய்யும் போது அந்தக் கழிவுகள் சுற்றுச் சூழலுக்கு பெரும் தீங்கு விளைவிக்கிறது என்ற சர்ச்சை உருவானது.மறு சுழற்சிக்கு ஏதுவான கணிப்பொறிகளை தயாரிக்க முடிவு செய்த ஜாப்ஸ் ஆப்பிள் நிறுவனத்தின் பழைய பொருட்களை தாங்களே பெற்றுக் கொள்வதாக அறிவித்தார். இந்த எதிர்ப்புகள் ஜாப்ஸை எதுவும் செய்து விட வில்லை. தனது புதிய கண்டுபிடிப்புகளை தலைமுறை தாண்டி யோசித்த அவர் அடுத்தடுத்து பல திட்டங்களை வைத்திருந்தார். ஆனால் காலம் மிக மோசமான ஒரு விளையாட்டை அவருடன் நடத்திக் கொண்டிருந்தது. அதை அவர் அறிந்திருந்தார் என்றாலும் அதை வெல்ல முடியவில்லை.

2011 ஆகஸ்ட் மாதம் தனக்கு உடல் நலம் சரியில்லை எனச் சொல்லி ஆப்பிள் நிறுவனத்திலிருந்து அவர் விலகினார். சைபர் உலகில் மிகப்பெரிய அதிர்ச்சியாக இருந்தது அந்த செய்தி. விலகுவதாக அவர் அறிவித்த அடுத்த சில மணி நேரங்களில் அப்பிள் நிறுவனம் பங்குச் சந்தையில் படு வீழ்ச்சியடைந்தது. ஸ்டீவ் ஜாப்ஸ் தூக்கி நிறுத்திய வால்ட் டிஸ்னி நிறுவனத்தின் பங்குகளும் கடும் வீழ்ச்சியைச் சந்தித்தது.

### *சொந்த வாழ்க்கை*

மிகப்பெரிய மனிதர்களின் தனிப்பட்ட் வாழ்க்கை மர்மங்கள் நிறைந்ததாகவே இருக்கும் என்பதைப் போல ஸ்டீவ் ஜாப்சின் வாழ்க்கையிலும் மர்மங்கள் நிறைந்திருந்தன. அவர் தன்னை நேசித்தவர்களை தேடிக் கொண்டிருந்தார். ஆன் ப்ரெனானுக்கும், என்ற பெண்ணுக்கும் ஸ்டீவ் ஜாப்சுக்கும் லிசா ப்ரென்னன் ஜாப்ஸ் என்ற மகள் உண்டு. ஆனால் சில வருடங்கள் தனக்கொரு மகள் இருப்பதை அவர் ஒத்துக் கொண்டதே இல்லை. இரண்டு வருடம் கழித்தே லிசா தன் மகள் என்பதை ஜாப்ஸ் ஒத்துக் கொண்டார். பிறந்த சில மாதங்களில் தத்துக் கொடுக்கப்பட்டு விட்ட ஜாப்ஸ் தன் தாயை 1980ஆம் ஆண்டு சந்தித்தார். தன் தங்கை மோனா சிம்சனை 1984ல் சந்தித்தார். தங்கையின் மீது



அளவுக்கு மீறிய அன்பைக் கொட்டிய ஸ்டீப் ஜாப்ஸ் அவளை ஒரு ரகசிய நண்பராகவே ஏற்றுக் கொண்டார். மோனா சிம்சன் தனது நாவல் ஒன்றின் வெளியீட்டு விழாவில்தான் தன் அண்ணன் தான் ஸ்டீவ் ஜாப்ஸ் என்ற உண்மையை வெளியிட்டார். மோனா சிம்சன் தன் தந்தையான ஜென்டாலியைத் தேடினார். பெற்ற தந்தையைத் தேடுவதை தன் சகோதரன் ஸ்டீவ் ஜாப்ஸிடம் சொன்ன போது "ஒரு வேளை அவரை நீ கண்டுபிடித்தால் கூட என்னைப் பற்றி அவரிடம் எதுவும் சொல்ல வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டார். வளர்த்த தந்தை , தாயை மட்டுமே நேசித்த ஸ்டீவ் ஜாப்ஸ் தன்னை பெற்ற தந்தையை, இளம் வயதிலேயே தன்னைத் தத்துக் கொடுத்துவிட்ட தந்தையை வெறுத்தார்.

கடைசியில் ஒரு வழியாக மோனா தன் தந்தையை தேடிக் கண்டு பிடித்தார். வயதான அந்த முதிய தகப்பனை மோனா சந்தித்த போது தன் மகளிடம் தான் முன்னர் சொந்தமாக வைத்திருந்த உணவகம் தொடர்பான கதைகளைக் கூறினார். உணவக வாடிக்கையாளர்கள் பற்றி கூறும் போது தனது உணவகத்தில் அப்பிள் நிறுவன அதிபர் ஸ்டீவ் ஜாப்ஸ் வந்து உணவருந்துவார் என்று தன் மகளிடம் பெருமையாகச் சொன்னாராம் ஜென்டாலி. ஜாப்ஸைப் பெற்ற ஜோன் சிம்சன் என்னும் அந்தத் தாய் வயது முதிர்ந்த நிலையில் முதியோர் இல்லம் ஒன்றில் வசிக்கிறாராம். பெற்ற தாய், தந்தையோடும், வளர்த்த தாய் தந்தையோடும் போராடிய ஸ்டீவ் 1991இல் லாரீன் பவ்வல் என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார் இவர்களுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர்.

### *புகழின் உச்சியில்*

1982 இல் டைம்ஸ் பத்திரிகையால் அவரது அப்பிளை "வருடத்தின் இயந்திரம்" என அறிவித்திருந்தது.

1984 இல் தொழில்நுட்பத்திற்கான தேசிய விருதை முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகன் வழங்கினார்.

1987 இல் சாமுவேல் எஸ் பியர்ட் விருது வழங்கப்பட்டது.

2007, நவம்பர் 27ல் "தொழில்நுட்பத்தில் மிகவும் சக்திவாய்ந்த மனிதர்" என்று பார்ச்சூன் மாத இதழ் கௌரவித்தது.

2009 ஆக்ஸ்ட் மாதத்தில் "எல்லோராலும் கவரப்பட்ட இளைஞர்" என இளம் சாதனையாளர்கள் அமைப்பு அறிவித்திருந்தது.

2011 செப்டம்பர் மாதம் உலகத்தின் 17ஆம் வரிசையில் உலகத்தின் மிகவும் சக்திவாய்ந்த நபர் என்று போர்பர்ஸ் நிறுவனம் பட்டியலிட்டது.

ஆனால் போர்பஸ் பத்திரிகை தகவல் வெளியிட்ட அடுத்த மாதமே ஜாப்ஸ் உலகிலிருந்து விடை பெற்றுக்கொண்டார். பிறந்த உடன் பெற்றவர்களால் நிராகரிக்கப்பட்ட ஸ்வீவ் ஜாப்ஸ் இன்று அமெரிக்காவின் கோடீஸ்வரர்களில் ஒருவர் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையாலும் முன்னாள் அதிபர்களாலும் கொண்டாடப்படும் மனிதராக மாறிப் போனார். மிகப்பெரிய கோடீஸ்வரர்கள் வாழ்ந்த இல்லங்களை அவர் வாங்கினார். முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் ஒரு முறை ஜாப்ஸை வெள்ளை மளிகைக்கு அழைத்து ஆப்ரஹாம் லிங்கன் பயன்படுத்திய அறையை ஜாப்ஸுக்கு திறந்து விட்டாராம். அது ஜாப்ஸுக்கு வழங்கப்பட்ட உயர்ந்த பட்ச மரியாதை.

### *மரணம்*

2003 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஜாப்ஸிற்கு கணையத்தில் புற்று நோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. புற்று நோய் ஆபத்தான் உயிர் கொல்லி நோய். முறையான சிகிச்சையும் உரிய மருத்துவ கவனிப்பையும் பெற்றால் மரணத்தை தள்ளிப் போடலாம் ஆனால் தடுக்க முடியாது. ஆனால் ஜாப்ஸ் தன் உடல் நலத்தில் கவனம் செலுத்தவில்லை. அவர் ஆங்கில மருந்துகளையோ மருத்துவர்கள் சொன்ன அறிவுரைகளையோ அவர் கேட்கவில்லை. கணையத்தில் வந்த புற்று நோயை கத்தி வைக்காமல் சரி செய்ய விரும்பிய ஜாப்ஸ் இந்திய மருத்துவத்தை தேர்ந்தெடுத்தார். அக்குபஞ்சர், மூலிகை மருந்துகளை உட்கொண்டார். வயிற்றை சுத்தப்படுத்திக் கொள்ள பழச்சாறுகளை மட்டுமே அருந்தினார்.

சுமார் ஒன்பது மாதங்கள் அவர் மருத்துவர்கள் கூறிய அறிவுரைகளை ஏற்றுக் கொள்ளாமல் அறுவை சிகிச்சையை தள்ளிப்போட்டார். ஆனால் 2004ஆம் ஆண்டு அவரது உடல் நிலையை மோசமாக்க அவர் அறுவை சிகிச்சையை ஏற்றுக் கொண்டார், கதிர் வீச்சு சிகிச்சைக்கும் சம்மதித்தார்.

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அப்பிள் நிறுவனத்தின் உலகளாவிய செயற்திட்டக் குழு கூட்டத்தின் போது உரையாற்றிய ஜாப்ஸின் தோற்றம் அவரது உடல் நிலையின் மோசமான விபரீதத்தை அனைவருக்கும் காட்டியது. கட்டான உடம்போடு புன்னகை தவழும் அந்த முகவும் உடல் வாகும் தொலைந்து நிலை குலைந்த மனிதராக ஸ்டீவ் ஜாப்ஸ் தோற்றமளித்தார். தனக்கான யாரும் பரிதாபப்படுவதை விரும்பாத ஜாப்ஸ் தன் உடல் நலக்குறைபாட்டை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை, உற்சாகமாக இருப்பதாக காட்டிக் கொண்டார்.

இதற்கிடையில் 2008 ஆம் ஆண்டு புலூம்பர்க் என்னும் வலைத்தளம் 2500 வார்த்தைகள் அடங்கிய ஸ்டீவ் ஜாப்சுக்கான இரங்கல் செய்தியை தவறுதலாக வெளியிட்டது. அனால் அதில் ஜாப்ஸ் பிறந்த தினமும், இறந்த தினமும் நிரப்பப்படாமல் விடப்பட்டிருந்தது. பிரபலமான மனிதர்கள் மரணத்தை எதிர் நோக்கி காத்திருந்தால் அவர்களின் மரணக்குறிப்புகளை முன்கூட்டியே எழுதி தயாரித்து வைத்திருக்கும் ஊடக தர்மத்தை அந்த இணைய தளம் மீறி வெளியிட்டு விட்டது. மிகப்பெரிய சர்ச்சைகளை உருவாக்கிய அந்த இரங்கற் செய்தியை ஜாப்ஸ் படித்து விட்டு மிகுந்த மன வேதனை அடைந்து 2008 செப்டம்பரில் இப்படி பதில் எழுதினார். எனது மரணச் செய்தியை படித்தேன் அது மிகைப்படுத்தப்பட்டதாக இருக்கிறது என்று எழுதினார். அக் கடிதத்தின் இறுதியில் அவர் 110/70 என ஒரு குறிப்பை எழுது முடித்தார். அது அவரது இரத்தக் கொதிப்பின் அளவு என்பது குறிப்பிடத்தக்கது.

உடல் நிலை காரணமாக விடுப்பில் ஜாப்ஸ் இருந்தாலும் அவர் தனது கனவுத் திட்டங்களுக்கு விடுப்பு கொடுக்கவில்லை. தலைமைப் பொறுப்பை டிம் குக்கிடம் கொடுத்து விட்டு அவர் 2009 இல் கல்லீரல் அறுவை சிகிச்சை செய்து கொண்ட போது கூட ஆப்பிள் ஐ பேட் இரண்டாவது வெளியீட்டிற்கு வந்தார். மாற்று அறுவை சிகிச்சை வெற்றியளிக்காத நிலையில் அவர் மூச்சு விடவும் இயல்பாக இருக்கவும் மிகவும் சிரமப்பட்டார். ஆப்பிள் நிறுவனத்தின் சேர்மனாக இப்போதும் இருந்து கொண்டிருந்த ஜாப்ஸ் தான் மரணிப்பதற்கு முந்தைய நாள் வரை ஆப்பிள் நிறுவனத்தின் சேர்மனாக தன் பணியைத் தொடர்ந்தார்.இறுதியில் அக்டோபர் ஐந்தாம் தேதி கலிபோர்னியாவில் உள்ள அவரது வீட்டில் மாலை மூன்று மணியளவில் மரித்துப் போனார். ஜாப்ஸின் நினைவாக அக்டோபர் 16ஆம் நாளை அனுசரிக்கப் போவதாக கலிபோர்னியா ஆளுநர் தெரிவித்தார். அந்த மனிதனின் இறுதிப் பயணம் நிம்மதியாக இருந்ததாக அவரது உறவினர்கள் அறிவித்தனர். இன்று நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கும் கணிப்பொறியில் தகவல் பறிமாற்றத்தின் எல்லா வடிவங்களையும் நமக்குக் கொடுத்த அந்த மனிதன் நிம்மதியாக உறங்குகிறான் கலிபோர்னியா கல்லறைத் தோட்டத்தில்.


FLY WINGS
Travel Agents
Lic No : 31883
Competitive Airfares
Accommodation & Tours
Travel Insurance
Interstate Coach Bookings
For All Your Travel Needs Contact Your Friendly Travel Agent
SHOP 4 DANDENONG ARCADE, 236 LONSDALE STREET, DANDENONG 3175
PH: (03) 9791-7522 FAX: (03) 9794-7844 EMAIL: fly1@net2000.com.au


LOANS! LOANS! LOANS!
வீடு வாங்கும் எண்ணமா?
வியாபாரம் ஆரம்பிக்க,
விரிவாக்க விருப்பமா?
முதலீடு செய்ய எண்ணமா?
சகல விதமான கடனுதவிகளும்
சிறப்பாக செய்து தரப்படும்.
Residential / Investment
Commercial Loan and
Equipment Finance
For obligation free consultation & Assessment
A friendly consultation backed up by more than
20 years of banking experience
Contact
Vivek N.Vivekananthan
0407 561 269


THE MANGO TREE
தாயக உணவுகளின் சங்கமம்...
அட...
அதே சுவை..
QUALITY
ASSURED
QUALITY
Mango Tree,
12, Clow Street,
Dandenong, Vic 3175
(Opposite to KFC)
(03) 9791 1111
0403 058 808
www.mangotreetakeaway.com.au